# உதயன்

விலை ரூபா 6-00

நடை 13 வள்ளுவர் ஆண்டு 2029 ஆவணி 14 ஞாயிற்றுக்கிழமை (30-08-1998) UTHAYAN – A Lively National Tamil Daily கதிர்: 235


# செப்ரெம்பரிலிருந்து மீண்டும் நிவாரணம்!

## 15 ஆயிரம் பதிவுத் தபால்கள் தேக்கம்

கொழும்பு, ஓக. 30

கொழும்பு மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்தில் தரம் பிரிக்கும் ஊழியர்களின் பற்றாக்குறை காரணமாக சுமார் 15 ஆயிரம் பதிவுத் தபால்கல் தேங்கிக்கிடப்பதா

(10 ஆம் பக்கம் பார்க்க)

## நடவடிக்கை எடுக்க ஜனாதிபதி பணிப்பு

கொழும்பு, ஓகஸ்ட் 30

**வன்னிப்பகுதி தவிர்ந்த ஏனைய இடங்களில் உள்ள இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் நிவாரணம் செப்ரெம்பர் முதலாம் திகதி முதல் பழைய நடைமுறைப்படி வழங்கப்பட உள்ளது. இதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்குமாறு வடமாகாண மீள் குடியேற்ற அதிகார சபைத் தலைவர் ஒபடகேயை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பணித்துள்ளார்.**

வடக்கில் இடம் பெயர்ந்து வாழும் மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் நிவாரணத்தைக் குறைப்பதற்கு அரசு முயற்சிகள் எடுத்து வந்ததுவும்—

இதனால் அரசியல் கட்சிகள், வெகுஜன அமைப்புகள், பொது மக்கள் ஆகியோர் போராட்டங்களை நடத்தி வந்ததுவும் —

அண்மையில் ஈ. பி. டி. பி. தூதுக்குழுவினர் ஜனாதிபதியை சந்தித்து பேச்சு நடத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பெண் ஊழியர் சுகவீன மர்மம் நீடிப்பு

அளுத்கம தர்கா நகரில் உள்ள ஆடை தயாரிப்புத் தொழிற்சாலையின் பெண் ஊழியர்கள் கடந்த 27 ஆம் திகதி திடீர் சுகவீனமுற்றதுக்

(10 ஆம் பக்கம் பார்க்க)



அப்ப போராட்டத்துக்குப் பணிவினம்போல இல்லை...!

## மூன்று இளைஞர்களின் சடலங்கள் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 30

இருபாலை ஆனந்தபுரம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்ததாக மூன்று இனந்தெரியாத இளைஞர்களின் சடலங்கள் யாழ். ஆஸ்பத்திரியில் கோப்பாய் பொலீஸாரால் நேற்று ஒப்படைக்கப்பட்டன.

சடலங்களில் துப்பாக்கிச் சூட்டுக்காயங்கள் காணப்பட்டன.

சுமார் 25 வயது மதிக்கத்தக்க இந்த இளைஞர்களின் சடலங்கள் இனம் காணும் பொருட்டும், மரண விசாரணையின் நிமித்தமும் ஆஸ்பத்திரிப் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

அதேசமயம் பலாலி இராணுவ தலைமையகம் நேற்று விடுத்த செய்திக் குறிப்பில் இருபாலையில் வெள்ளிஇரவு 9. 30 மணியளவில் படையினர் மறைந்திருந்த சமயம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஒலுமடுவுக்குத் தெற்கே புலிகள் மோட்டார் தாக்கு

யாழ்ப்பாணம், ஓக. 30

ஒலுமடுவுக்கு தெற்கே நிலை கொண்டுள்ள படையினர் மீது புலிகள் மோட்டார் தாக்குதல் நடத்தி உள்ளனர்.

வெள்ளி இரவு 10.15 மணி அளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

படையினர் ஆட்லறி மற்றும் மோட்டார்கள் கொண்டு திருப்பித் தாக்கியதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

அதே தினம் பிற்பகல் 2.45 மணி அளவில் வன்னிவிளாங்குளத்துக்கு தெற்கே புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

இந்த மோதலில் விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் மற்றும் ஒருவர் காயமடைந்ததாகவும் இரு கிளைமோர் கண்ணிகளை படையினர் கைப்பற்றியதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

## ராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் குழந்தைகள் பட்டினிச்சாவு நிலைமை

### தூதுக்குழு அனுப்ப அரசிடம் கோரிக்கை

கொழும்பு, ஓக. 30

இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா பகுதியில் நிவாரண வெட்டால் மக்கள் — குறிப்பாகக் குழந்தைகள் — பட்டினிச்சாவை நோக்கித் தள்ளப்படும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளின் உண்மை நிலைமையைக் கண்டறிய செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் உதவியுடன் அதிகாரிகள் குழு ஒன்றை அரசு அனுப்பலாம்.

மேற்கண்டவாறு ஐ.தே.க நியமன எம். பி. ஜெயலத் ஜெயவர்த்தனா விடுத்த பத்திரிகைச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா மாவட்டங்களில் 4 லட்சத்து 55 ஆயிரம் பேர் வசிக்கின்றனர் அவர்களில் 3 லட்சத்து 45 ஆயிரம் பேர் இடம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### பூவரசங்குளத்தில்

## "பாஸ்" வழங்கும்பணியில் மேலதிகப் படையினர்

வவுனியா, ஓக. 30

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பிரதேசத்திலிருந்து வவுனியா வரும் பயணிகள் புதிய பாஸ் நடைமுறையால் எதிர்நோக்கும் பிரச்சினைகளை தீர்க்கும் வகையில் மேலதிக படையினர் பாஸ் வழங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் என வவுனியாவில் படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வவுனியா வரும் பயணிகளுக்கு புதிய பாஸ் வழங்கும் நடைமுறைக்கு அமைவாக பூவரசங்குளத்தில் நீண்ட நேரம் பயணிகள் காத்திருக்க வேண்டிய ஒரு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ சீருடையில் 2 கொள்ளையர் கைது!

### வல்லையில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஓக. 30

இராணுவச் சீருடையுடன் வீடு ஒன்றினுள் கொள்ளையிட்டுக்கொண்டிருந்த இருவர் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு வல்வெட்டித்துறைப் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றதாகப் பலாலி இராணுவ தலைமையகம் விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகள் நடைபெற்றுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சிலநாள்களாக யாழ். குடாநாட்டில் பல பகுதிகளிலும் இராணுவச் சீருடையில் சென்று கொள்ளையில் ஈடுபடுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது. (இ-9)

### தீவுப்பகுதியைச் சேர்ந்த

## 57 தொண்டர் ஆசிரியர் நிரந்தர நியமனம்

யாழ்ப்பாணம், ஓக. 30

தீவுப் பகுதிகளில் கடமையாற்றிவரும் 57 தொண்டர் ஆசிரியர்களுக்கான நிரந்தர ஆசிரியர் நியமனக் கடிதங்களை யாழ். கல்வி வலயம் ஒன்றின் கல்விப்பணிப்பாளர் நா. சுந்தரலிங்கம் நேரில் சென்று வழங்கியுள்ளார்.

தீவுப் பகுதிகளில் சுமார் 90 தொண்டர் ஆசிரியர்கள் கடமையாற்றி வருகின்றனர். அவர்களுக்கு நிரந்தர ஆசிரிய நியமனம் வழங்கப்பட வேண்டும் எனக் கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வந்தன. இந்தத் தொண்டராசிரியர்களில் 57 பேருக்கே கடந்த வியாழக்கிழமை கல்விப் பணிப்பாளர் நேரில் சென்று நியமனங்களை வழங்கியுள்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் செவ்வாய் முதல் மண்எண்ணெய்க்கும் கட்டுப்பாடு

### பாதுகாப்பு அதிகாரிகள் கூட்டத்தில் முடிவு

வவுனியா, ஓக. 30

வவுனியா மாவட்டத்தில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முதல் மண் எண்ணெய்க்கும் புதிய கட்டுப்பாடு கொண்டு வரப்பட்டுள்ளது.

வவுனியாவிலிருந்து இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்கு எரிபொருள்கள் கடத்தப்படுவதாகக்கூறி பாதுகாப்பு அமைச்சு டீசல், பெற்றோல் ஆகியவற்றுக்கு கட்டுப்பாட்டை விதித்திருந்தது. அந்தக் கட்டுப்பாட்டை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முதல் மண்எண்ணெய்க்கும் விஸ்தரிப்பதென கடந்த 27 ஆம் திகதி பாதுகாப்பு அதிகாரிகள் மட்டத்தில் நடந்த கூட்டம் ஒன்றில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்

(10 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## LION AIR



### விமான சேவை

எதிர்வரும் **01-09-1998** தொடக்கம் 72 மணித்தியாலங்களுக்கு (03 நாள்களுக்கு) முன்னதாக எமது பிரயாண ரிக்கெட்டினை பெற்றுக்கொள்வதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

இதனால் பிரயாணிகளுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகிறோம்.

**General Sales Agent Lion air,**
Markandu Stores,
NO. 37, KASTHURIYAR ROAD, JAFFNA.

135, WOLFENDHAL STREET,
COLOMBO - 13,

(சி/4698)

## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி.

எமது தியேட்டரில் திரை, ஒளி அமைப்பு மிக உன்னதமான நவீன முறையில் திருத்தியமைக்கப்பட்டுள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

இன்று முதல்
ரஜனி - பூர்ணிமா
நடித்த
**தங்க மகன்**
நேரம்:- 10-30, 2-30
(பழைய நேரம்)
Tele. No. 070-212228
(58486)

## ராஜா டாக்கீஸ்

யாழ்ப்பாணம்.

ரஜனி, மீனா
சரத்பாபு, செந்தில்
நடித்த
**முத்து**

## ராஜா 'B' திரை

யாழ்ப்பாணம்.

விஜயகாந்த் - ப்ரிதா
மனோரமா நடித்த
தர்மா
10-30, 2-00, 5-00
(புதிய நேரம்)

## ராஜா கொமினிகேஷன்

உள்நாட்டு, வெளிநாட்டு
தொலைத்தொடர்பு
சேவையை
உடனுக்குடன்
பெற்றுக்கொள்ளலாம்.
Tele. No. 021 - 2318
(சி/4682)

## தூரிகை

### நுண்கலை வளாகம்

**மனையியற் பிரிவின்**
**புதிய பயிற்சி வகுப்புக்கள்**

சான்றிதழுடன் கூடிய இரண்டு மாத கால பயிற்சிகளின் பிரிவு

02 — 09 — 1998 [புதன்] ஆரம்பம்

- Hair style
- கேக் ஐசிங்
- Fabric Painting
- பூவேலை
- Art Painting
- தையல் (6 மாதம்)

சட்டநாதர் வீதி, நல்லூர். | ம. ம. வி. வீதி, நெல்லியடி.

(58767)

# HARCROS

## AGROCHEMICALS

**மன்னார், வவுனியா**
மற்றும்
**திருகோணமலை**

ஆகிய இடங்களுக்கு விநியோகஸ்தர்கள் தேவை. விண்ணப்பிப்பவர்கள் தங்களிடமுள்ள வசதிகள் மற்றும் வங்கி வழங்கவுள்ள உத்தரவாதம் பற்றிய விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

விற்பனை முகாமையாளர்
330, ரி. பி. ஜாயா மாவத்த
கொழும்பு 10

(சி/4622)

## YOGI HOME SCIENCE ACADEMY

### புதிய வகுப்புகள் 05 - 09 - 98 முதல் ஆரம்பம்

1) இலகுமுழித் தையல் (Cutting Classes)
2) கேக் ஐசிங் (Birthdey Cakes and Wedding Structures)
3) மேலைத்தேய ஐசிங் அலங்காரங்கள் (Fondant Icing and Sugar Craft)
4) நவீன சமையல் முறைகள்
5) பூக்கள் தயாரித்தலும் அலங்கரித்தலும்
6) துணியில் வர்ண அலங்கரிப்பு 7 வகுப்புக்கள் மட்டும் (Modern Fabric Paintings)

**விசேட பயிற்சி நெறிகள்:**

Basic Make - Up and Hair Dressing

(அடிப்படை ஒப்பனையும், தலை அலங்காரங்களும்)

இதில் பாடக்குறிப்புகளுடன் கூடிய செய்முறை விளக்கங்கள், சகல வைபவங்களுக்குமான முக ஒப்பனைகள் நவீன புதியதலை அலங்காரங்கள், இந்திய, சிங்கள, குஜராத்தி மடிசார் போன்ற வித்தியாசமான சாறி அணியும் முறைகள், இந்த பயிற்சி நெறி 15 வகுப்புகள் மட்டும்; முடிவில் செயல் முறை பரீட்சைகள் மூலம் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

உயர்தர பரீட்சைக்குத் தோற்றிய மாணவிகளும் மற்றும் சேரவிரும்பும் மாணவிகளும் உடன் தொடர்பு கொள்ளவும்.

75, அம்மன் றோட் (நல்லூர் வீரமாகாளி அம்மன் கோவில் முன்பாக)
யாழ்ப்பாணம். (58770)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எலைற் கல்வி நிலையத்தின் கணித ஆசிரியர்
தி அற்புதராஜாவின்
தந்தையார்

**பொன்னையா தியாகராஜா**

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

O/L DAY CLASS மாணவர்கள்
எலைற் கல்வி நிலையம்
(58771)

# மரண அறிவித்தல்கள்

## திரு. A. இராஜரத்தினம்

சுன்னாகம் கிழக்கைச் சேர்ந்த ஐயாத்துரை இராஜரத்தினம் 28-08-98 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி ஐயாத்துரை அன்னப்பிள்ளை ஆகியோரது அன்பு மகனும், மலேசியாவைச் சேர்ந்த காலஞ் சென்றவர்களான திரு.திருமதி சபாபதி சிவபாக்கியம் ஆகியோரது அன்பு மருமகனும், சரோஜினிதேவியின் அன்புக் கணவரும், மேகலா (மருத்துவபீடம், கொழும்பு பல்கலைக்கழகம்), ஷகிலா, பவானி (உடுவில் மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (30-08-98) ஞாயிற்றுக்கிழமை காலை 11-00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சுன்னாகம் கொத்தியாலடி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி சரோஜினிதேவி இராஜரட்ணம்
சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.
(58779)

## வைத்திலிங்கம் கனகரத்தினம்

யாழ்ப்பாணம் பொன்னாலையைப் பிறப்பிடமாகவும், அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் கனகரத்தினம் (முன்னாள் இ.போ.ச. சாரதி) 28-8-98 இல் திருமலையில் காலமானார்.

அன்னார் இலட்சுமியின் அன்புக் கணவரும், துஷ்யந்தினி (ஆசிரியை, திருமலை கன்னியர் மடம), சேகரன் (Oman), ஜெயந்தினி, புவிசேகரன் (Oman) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், இராசதுரை (துர்க்கா பேக்கரி, அளவெட்டி), ஜனாதினி (கொழும்பு) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான திருமதி இராசமணி—கந்தையா, கந்தையா, சின்னத்துரை, பஞ்சாட்சரம் மற்றும் திருமதி பொன்கிளி—வன்னியசிங்கம் (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும், குணசேகரம், தனசேகரம், திருமதி ஜெகதீஸ்வரி—விஸ்வநாதபிள்ளை (ஆசிரியை யா/அருணோதயக் கல்லூரி, அளவெட்டி), டாக்டர் சந்திரசேகரம் (Canada) ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற வைததிலிங்கம் - பொன்னு ஆகியோரின் அன்பு மகனும், கனகசபாபதி — ஆச்சிமுத்து ஆகியோரின் அன்பு மருமகனும், துஷிந்றா, தனுசாயினி, மோகனராஜி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று 29-8-98 சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் திருமலையில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்;
செல்வி வி. காயத்திரி
(பேறாமகள்)
வேளாவை,
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.
(58781)

## பொன்னையா தியாகராஜா

மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா தியாகராஜா (தியாகு) (சாலைப் பரிசோதகர், இ. போ. ச பருத்தித்துறை) அவர்கள் 28. 08. 98 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் புஸ்பரத்தினத்தின் அன்புக்கணவரும், புஸ்பராசா (புஸ்பா ஸ்ரோர்ஸ்), சற்குணராசா (வாசன்), ஜெயராசா (பொறியியலாளர், சிங்கப்பூர்), ஜெயந்தினி (லிகிதர் N. A. A. B), யாழ்ப்பாணம்), அற்புதராஜா (ஆசிரியர், யா/நாவற்குழி ம. வி), நிர்வாகி எலைற் கல்வி நிறுவனம்), லிங்சராசா சுகந்தினி (N. D. B. S, 2nd Year, ATI), நிறஞ்சினி (வர்த்தகப் பிரிவு மாணவி, யா/கனகரத்தினம் ம. ம. வி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற தங்கராசா, மனோன்மணி, கனகம்மா, யோகராசா (டோகா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 192, கச்சேரி நல்லூர் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக இன்று 30. 08. 98 ஞாயிற்றுக்கிழமை மாலை 3. 30 மணியளவில் (புதிய நேரம்) செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
தீ. புஸ்பராசா
(மகன்)
192, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
(58769)

# சூரியகாந்தி

உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

# நல்வாழ்வுக்கு நல்ல மனம் வேண்டும்; நல்ல மனதுக்கு விருப்பமே அத்திவாரம்!

ஒவ்வொரு மனிதனும் செய்கின்ற கருமங்களுக்கு அவனுடைய மனமே காரணமாகும். அவை நல்லனவாகவோ அன்றித் தீயனவாகவோ இருக்கலாம். 'நன்றும் தீதும் பிறர்தர வாரா' என்பது பழமொழி. ஆயினும் நீதி நூல்கள் நல்ல கருமங்களைச் செய்வதையே அறம் என்று கூறுகின்றன. நல்ல செயல்களைச் செய்வதற்கு மனத்தூய்மை அவசியம். மனந்தூய்மையாக இருந்தாலே அறவினை செய்ததுபோல ஆகிவிடும் என்பது நீதி நூல்களின் நம்பிக்கை. மனந்தூய்மையாக இருந்தால் சொல்லும் செயலும் நல்லனவாக இருக்கும். விருப்பம் அல்லது ''மனம் உண்டானால் இடமுண்டு'' என்ற பழமொழியும் உண்டு.

இதனாலேதான் ஔவையார் தமது ''ஆத்தி சூடி'' யில் அறம்செய விரும்பு வித்தை விரும்பு, தானமது விரும்பு என்று, விரும்புவதை முக்கியமாகக் கூறியுள்ளார். அறத்தைச்செய் என்றோ, வித்தையைக் கல் என்றோ, தானத்தைச்செய் என்றோ கூறாமல் 'விரும்பு' என்று சொன்னது விருப்பம் மனதிலிருந்து வெளிப்படுகிறது என்பதனாலாகும். விருப்பம் உண்டானால் செயல் நடைபெறுவதற்கு வாய்ப்பு அப்போதைக்கு இல்லா விட்டாலும் எப்போதாவது நடைபெறும் என்பது அவரது துணிபு ஆகும்.

## மட்டுவில் நா. நல்லதம்பி

மனம் விரும்பினால் அதுவே போதும்; மனம் வைத்தால் எதையும் செய்யலாம் என்ற ஔவையாருடன், தெய்வப் புலவரும் உடன்படுவதைக் காணலாம்.

''மனத்துக்கண் மாசிலன் ஆதல்; அனைத்தறன்; ஆகுல நீர பிற'' — என்பது அவரது வாக்கு

மேலும், குற்றமற்ற மனத்தோடு செய்கின்ற அறங்களே நல்லறமாகும் என்று அறம் செய்பவனுக்கு இருக்க வேண்டிய மனத்தூய்மையைக் கூறுகின்றார்.

அழுக்காறு, அவா, வெகுளி இன்னாச்சொல் நான்கும் இழுக்கா இயன்றது அறம் - என்பது அதுவாகும்.

இனி அறம் என்றால் என்ன என்ற சிறிது ஆராய்வோம். அறம் என்றால் புண்ணியம், தருமம், நல்வினை, கடமை என்றெல்லாம் பொருள் கூறலாம். தனக்கும் பிறருக்கும் நன்மை பயக்கக் கூடிய எந்தக்காரியத்தைச் செய்தாலும் அது அறத்தின் பாற்படும். பசி என்று வந்தவனுக்கு ஒரு பிடி சோறு கொடுப்பது முதல் பாடசாலை கட்டுவதும், கோயில் கட்டுவதும் எல்லாம் அறங்களே. இயல்புடைய மூவர்க்கும் இல் வாழ்வான் துணையாக இருப்பதும் நல்லறமாகும். துறவி யொருவன் தனக்குரிய ஒழுக்க நெறியிலே வழுவாது நிற்பது துறவறமாகும். இப்படியே அரசன்

## விஞ்ஞானத்தால் மனம் பண்படவில்லையே!

செங்கோல் செலுத்துவதும் ஏனைய அதிகாரிகளும், தலைவர்களும் தத்தம் கடமைகளைச் செய்வதும் அறங்களே.

இந்த அறங்களை மனம்போன போக்கிலே செய்யாமல், உலகத்தோடு ஒட்டி மனச் செம்மையோடு செய்ய வேண்டும். அதனாலே தான் அறமும், மனமும், விருப்பமும் ஒன்றாகப் பார்க்கப்படுகின்றன.

மேலும் பொருள்வளமும், ஆள்பலமும் இருந்தாற்றான் அறம் செய்யலாம் என்பதில்லை. மனவிருப்பந்தான் முதலாவது தேவைப்படுகிறது. இதுதான் ஔவையார் கூறுவதும் வள்ளுவனார் கூறுவதும் வேறு நீதி நூல்கள் கூறுவதும் ஆகும். மனமது தூய்மையானால் மந்திரஞ் செபிக்க வேண்டாம் என்று சொல்லப் பெறுவதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

### கர்ணனின் கொடை

கொடை வள்ளல் என்று போற்றப் பெறும் கர்ணன் கதை நமக்குத் தெரிந்ததே. இவன் தேரோட்டியின் மகன் என்ற நிலையிலும் சரி, அரசபோகமும் அந்தஸ்தும் பெற்ற போதும் சரி, நல்ல இதயம் உள்ளவனாகவே இருந்தான். அவன் பொருள் அற்ற நிலையிலும் கொடுத்தான்; பொருள்பெற்ற நிலையிலும் கொடுத்தான். இங்கே பொருள் என்பது அவனுக்கு ஒரு பொருளாகத் தெரியவில்லை. மனம் — கொடுக்க வேண்டும் என்ற மனம் — அவனுக்குப் பெரிதாக இருந்தது.

நல்ல மனம் ஒரு போதும் மாறாது துர்க்குணம் படைத்த துரியோதனன் பால் நட்பூண்டுவேறு வழிகளில் அவனுக்கு ஒத்துழைப்புத் தந்தாலும், அடிப்படையில் அவனுக்கிருந்த நல்லிதயம் மாறவில்லை. தனது சகோதர பாண்டவர்களுக்கு ஈயிருக்கும் இடந்தானும் கொடுக்க மறுத்த கல்நெஞ்சக்காரனுக்கு நண்பனாயிருந்தாலும் கர்ண மனம் கனிவாகத்தானிருந்தது.

வேம்பின் இலையுட் கனியினும் வாழைதன்
தீஞ்சுவை யாதும் திரியாதாம்; ஆங்கே
இனந்தீதெனினும் இயல்புடையார் கேண்மை
மனந் தீதாம் பக்க மரிது.

இது நாலடியார் கூற்று: வேப்பிலை யோடு வைத்துப் பழுக்கச் செய்தலும்

( 4 ஆம் பக்கம் பார்க்க)

## எதிரொலி

- ● ஆயுர்வேத மருந்து 'லேபிள்' ஒட்டிய போத்தலில் கசிப்பு விற்பனை.
- ★ ஆயுர்வேதமருந்துப்போத்தலில் 'ஆயுள் வேதனை' மருந்து விற்பனையாகின்றது!
- ● வவுனியாவில் பெற்றோல், டீசல் மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாட்டை நீக்கக் கோரி 'புளொட்' இயக்கத்தினர் சத்தியாக்கிரக நிகழ்ச்சிகளை நடத்தினர், இப்போது மண்ணெண்ணெய்க்கும் கட்டுப்பாடு விதிக்க அரசு முயல்கின்றது!
- ★ ஒட்டக் கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்.
- ● 'பிறின்சஸ் காஷ்' கப்பலில் அழிக்கப்பட்ட பொருள்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படும் என்ற செய்தியில் எவ்வித உண்மையும் இல்லை என ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.
- ★ 'யாரைத்தான் நம்புவதோ பேதை நெஞ்சே?' எனப் பாடுகிறார் ஒரு சினிமாப்பித்தர்!
- ● இந்தியாவிலே விஷச் சாராயம் அருந்திய 54 பேர் மரணமடைந்துள்ளனர்.
- ★ 'சா'ராயம் என்பதே 'சா'வில் தானே தொடங்குகின்றது.
- ● திருமலை புதிய சந்தைப் பிரச்சினை சம்பந்தமான கூட்டத்திலே இரண்டு அமைச்சர்கள் கலந்து கொள்வர்.
- ★ அலைச்சல், கரைச்சல், இரைச்சலைத் தவிர சந்தை விஷயத்தில் வேறு ஒன்றும் ஏற்படப்போவதில்லை!
- ● மொனிக்கா என்ற பெண்ணுடன் தவறான முறையிலே தான் நடந்து கொண்டதை அமெரிக்க ஜனாதிபதி பகிரங்கமாக ஒப்புக் கொண்டார்.
- ★ இந்தப் 'பெருந்தன்மைப்' போர்வையால், பல சின்னத்தனங்களை மறைக்க முயல்கின்றாரோ?
- ● கண்டியில் பல இடங்களில் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.
- ★ எல்லாம் அ'வன்' செயல்!
- ● கிருஷாந்தி கொலை வழக்கிலே குற்றம் சாட்டப்பட்ட ராஜபக்ஷாவை வெலிக்கடைச் சிறை அதிகாரிகளே தாக்கினார்கள்.
- ★ வெலிக்கடைச் சிறைச்சாலை, இப்போது ஜனநாயகத்தின் 'பலிக்கடை'யாக மாறிவிட்டதோ?
- ● புலம்பெயர்ந்த மக்களுக்குரிய நிவாரணத்தில் வெட்டு
- ★ இந்த 'வெட்டு' பல பிளவுகளை உண்டாக்கலாம்.

— இடியன்

## சொல்தரும்சுவை, பெருஞ்சுகம்

ஒரு மொழியில் உள்ள ஒவ்வொரு சொல்லும் ஒரு காலத்தில் மகிழ்ச்சியுடன் பயன்பட்டதே ஆகும்— என்றார் எமர்சன்.

''வாக்கென்னு, மாலை கொண்டுன்னையென்மனத்து ஆர்க்கின்றேன்'' என்றும்—

சொன்மாலை பயில்கின்ற குயிலினங்காள் சொல்லீரே பன்மாலை வரிவண்டு பண்மிழற்றும் பழனத்தான் முன் மாலை நகு திங்கள் முகிழ் விளங்கு முடிச் சென்னிப் பொன் மார்பனென் புது நலமுண்டிகழ்வானோ'' — என்று குயிலிடமும் சொல்கிறார் திருநாவுக்கரசர்.

சொல்லும் பொருளுமாய் நிறைந்த சுகமே யன்பர் துதிதுணையே புல்லும் புகழ் சேர் நற்றணிகைப் பொருப்பின் மருந்தே பூரணமே அல்லும் பகலும் நின்னாமம் அந்தோ நினைந்துன்னானாகேன்''—என்பது இராமலிங்க சுவாமிகளின் மன வேண்டுதல்.

''செஞ்சொற் புலவர் சங்கத் தமிழ் தெரி செந்திற்பதி நகர் உறைவோனே''— — நெஞ்சக்கன கல்லு நெகிழ்ந்துருகசொல் மாலை புனைந்த அருணகிரிநாதரின் அனுபவம் இது.

'' சொல்லுங் கடங்காச் சுகப்பொருளை நாமெனவே அல்லும் பகலும் அரற்றுவதென் நல்ல சிவ ஞானமயம் பெற்றோர்கள் நாமில்லை என்பர் அந்தோ மோன மயமான முறை'' — என்று தாயுமான சுவாமிகள் சொல்லின் சுகம் தெரிந்து, தெளிந்து, உணர்ந்து இவ்விதம் கூறினார்.

சொல்லாகிய பொருள் எல்லாம் உணர்ந்துணைத் தோத்திரிக்க வல்லார்'' என்பது சிவஞானதேசிகரின் அனுபவம்.

''பாலினும்சொல் இனியாய் பனிமலர்ப் பாதம் வைக்க'' — என்ற அபிராமிப்பட்டர் —

''தூக்கும் பனுவற்றுறை தோய்ந்த கல்வியும் சொற்சுவைதோய்வாக்கும் பெருகப் பணித்தருள்வாய்'' என்றும்—

''சொல்விற்பனமும் அவதானமுங்கவி சொல்ல வல்ல நல்வித்தையுந்தந்தடிமை கொள்வாய்'' என்றும் அம்மையிடம் வேண்டுகிறார்.

''சொல்லிடும் சொல்லில் நிற்பாள் சொற் பொருள் தன்னில் நிற்பாள். ஒவ்வொரு இரவும் நீங்காள் எவ்வகைச் செயலும் செய்வாள்'' என்று சொல்கிறார் புலியூர்க் கேசிகன் என்ற கவிஞர்.

**க. கணேசலிங்கம்**

''சொல்லினாலே கவி சொல்ல வந்தேன் சொல்லில் அமுதினை மெல்ல வைத்தாள் கொல்லும் அமிழ்தினில்கூறவந்தேன். கோடிக் கவிதைகள் ஊறவைத்தாள்'' — என்றவர் மகாகவி பாரதியார்.

'வேதம்பாடிய சோதியைக் கண்டு வேள்விப்பாடல்கள் பாடுதற்குற்றேன். நாதவார் கடலின் ஒலியோடு நற்றமிழ்ச் சொல் இசையையும் சேர்ப்பேன்' — என்றும் கடலின் ஒலியோடு நற்றமிழ்ச்சொல் இசையைச் சேர்த்து மகிழ்கிறார் அவர்.

'கவின் பொலியும் மலர்த் தேனோ? கன்னல் தரும் இன் சுவையோ? கவலை போக்கச் செவிமடுக்கும் இசைக் குரலோ? தென்பொதிகைத் தென்றலிதோ? தேன் மணக்கும் கவிதைதரும் இன்பமிதோ? கனிச்சாறோ? இல்லையில்லை கண்மணி நீ. நவில்மழலைச் சொற்களெலாம் நந்தமிழின் சுவையொக்கும் நற்குழந்தாய்!'' என்று குழந்தையைத் தாலாட்டும் போதும் சொற்களின் சுவை உணரப்படுகிறது, உணர்த்தப்படுகிறது, ஊட்டப்படுகிறது.

வண்ண வண்ண சொலெடுத்து வந்தது செந்தமிழ்ப்பாட்டு, வாசமுள்ள மல்லிகைப் பூமணம் தந்தது செந்தமிழ்ப் பாட்டு'' எனவும் சொல்லின் இனிமையை வாசமலரின் இனிய வாசத்துடன் சேர்த்து சுவைக்கிறார்கள் கவிஞர்கள்.

''கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகுமா? கலையெல்லாம் கண்கள் சொல்லும் கலையாகுமா? சொல்லெல்லாம் தூய தமிழ் சொல்லாகுமா? சுவையெல்லாம் இதழ்சிந்தும் சுவையாகுமா? கன்னித்தமிழ் தந்ததொரு திருவாசகம் கல்லைக் கனியாக்கும் உந்தன் ஒரு வாசகம்...''

தமிழ்ச் சொல்லின் சுவை பற்றிய கண்ணதாசனின் கணிப்பு இது.

'ழ' என்ற எழுத்து தமிழ் மொழிக்குச் சிறப்பாக அமைந்திருப்பதற்குக் காரணம் தமிழர்கள் எப்பொழுதும் குழைவிலே நல்ல பற்று உள்ளவர்கள். யாரிடத்திலும் இழைந்திருக்க வேண்டும்,

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக உறவுகளில் மலியும் சுயநலம்; அதனை அகற்ற அன்புறவு தேவை

அன்பே கடவுள் (1 அரு. 4:16.) அவர் அன்பு செய்யவே உலகில் மனிதனைப் படைத்தார். (அரு. 4:7)

அந்த அன்புக்காக ஏங்கும் இதயங்களை பல உருவங்களில் எம்முன்னே காண்கின்றோம். இன்று அன்பு செய்வதிலும் மனிதர்களிடையே சுயநலம் மிஞ்சி நிற்பதை அன்றாட வாழ்வியல் அனுபவங்களூடாக தரிசிக்கின்றோம். எதைச் செய்தாலும் அதில் எனக்கு என்ன லாபம் உண்டு என்ற சுயநல மனநிலை சமூக உறவுகளிடையேயும் வளர்கிறது. மனித உறவுகள் சுயநலத்தில் மாறி விட்டதால், இந்த உறவு நிலையிலேயே இறைவனிடமும் தொடர்பை ஏற்படுத்த மக்கள் முனைகிறார்கள்.

ஆலயம் செல்லாமலே ஆண்டவனுக்கு காணிக்கையால் வேண்டுதல்களை நிறைவேற்ற முனைபவர்களும், ஆண்டவனிடமே பேரம் பேச்சுகள், பேச்சு வார்த்தைகள் செய்து இதைத் தருகிறேன்; அதைத்தருகிறாயா? அதைத் தந்தால் இதைத் தருகிறேன் என்ற பேரங்களை கடவுளிடம் கேட்கும் கட்டளையாக, வேண்டுதலாக மாறிவிடுகிறது.

தந்தை, தாய், பிள்ளை

**ஞாயிறு நற்பிரசாதம்**

கள் இணைந்த திருக்குடும்பத்தின் உறவை யேசு, மரி, சூசை வழியாக தரிசிக்கின்றோம். அன்பு, தியாகம், சேவை என்று உறவுக்கு அத்திவாரம் இடப்பட்ட திருக்குடும்பத்தின் வழியாகவே திருச்சபை கட்டி வளர்க்கப்பட்டது.

அந்த ஆன்மீக உறவை எம்மில் கட்டி எழுப்பும் முன்மாதிரிகளாக வாழ்ந்து காட்டிய வாழ்க்கை முறைகள் எம் வாழ்விலும் மலரவேண்டுமானால், கடவுளின் பிரசன்னத்தை எமது குடும்ப உறவிலும் தரிசிக்க வேண்டுமானால், நமது உறவிலும் கள்ளம், கபடம், சுயநலம் களையப்பட்ட குடும்ப, சமூக உறவுகள் மலர வேண்டும்.

"உங்கள் அன்புகள்ளமற்ற

அருட்சகோதரர்
**செ. தொபியாஸ்**
(மாத்தளையிலிருந்து)

தாய் இருப்பதாக. தீமையை வெறுத்து நன்மையே பற்றிக் கொண்டிருங்கள். சகோதரர்க்குரிய முறையில் ஒருவருக்கொருவர் உள்ளங்கனிந்த அன்பு காட்டுங்கள். பிறர் உங்களைவிட மதிப்புக்குரியவரென எண்ணுங்கள். ஊக்கந் தளராதிருங்கள். ஆர்வந் தணியாதிருங்கள். நீங்கள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# வேத போதனையில் தனியிடம் வகித்த "வாத்தியார்" சுப்ரமண்ய சாஸ்திரிகள்

தமிழ் நாட்டிலே பிறந்து வளர்ந்து கல்வி கற்று காஞ்சிப் பெரியவான் மடத்தில ஒழுக்கத்துடன் வாழ்ந்து அவர் ஆக்ஞைபின்படி ஈசய் நாட்டில் நல்லூர் கைலாசபிள்ளையார் கோயில் முன்னாள் பிரதம சிவாச்சார்ய சிவஸ்ரீ. குருசாமிக் குருக்கள் ஐயா அவர்களின் புத்திரியை சகதர்மிணியாக ஏற்று அவ்வாலயத்திற்கு ஈசானதிக்கில் தமது வாழ்க்

**நீத்தார் நயப்புரை**

கையை ஆரம்பித்தவர் பிரம்மஸ்ரீசுப்பிரமண்ய சாஸ்திரிகள்.

தனெக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்து காட்டிய பெருந்தகை அவர்... சமஸ்கிருதக் கல்வியில் வேதம், ஆகமம், மீமாம்சை, நியாயம், இலக்கியம், ஜோதிடம் முதலிய எல்லாத்துறைகளிலும் சிறந்த விற்பன்னராகத் திகழ்ந்ததோடு மட்டுமன்றி முககியமாக வேத பாராயணத்தில் அவருக்கு நிகர் அவரே தான். கணீரென்ற ஓசையுடன் சிறந்த இனிமையான குரலோடு அவர்வேதபாராயணஞ் செய்யும் போது சிறு குழந்தைகளும் அதை உற்றுக் கவனிக்கும்.

அவரது குடும்பம் ஒரு கோயிலாகும். அவரது இல்லத்துக்குள் நுழையும் போதே ஒரு புனிதமான ஆலயத்திற்குள் நுழைவது போன்ற உணர்வு ஏற்படும். அவரது சகதர்மிணி, புத்திர, புத்திரிகள் எல்லோரும் அவரிடம் அன்பை விட மேலாக பக்தி பூண்டவர்கள். தம் குழந்தைகளுடைய பேரைச் சொல்லி அவர் அவர்களை அழைக்கும் போது புத்திர வாஞ்சை, அன்பு வெளிப்படும். வீட்டிற்கு வருபவர்களை வாத்தியாரய்யா அன்போடு வரவேற்று குசலம் விசாரிப்பார். பல சந்தேகங்கள் தெளிவதற்கு அவரிடம் பல வகையான மக்கள், அந்தணர்கள், சிற்ப வல்லுநர்கள், சைவப் பெரியார்கள், பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள், ஆலய தர்மகர்த்தாக்கள் எல்லோருமே செல்வார்கள். அவர்களுக்கு வேண்டிய விளக்கமளித்து அன்போடு விடை கொடுத்தனுப்புவார்.

### வேத போதனையில் தனி இடம்

இலங்கையில் வாழ்கின்ற பல சிவாச்சாரியர்கள் சுப்பிரம்மண்ய சாஸ்திரிகளின் பாரம்பர்யத்தை அனுசரித்து ஒழுகுபவர்களாவார்கள். கிட்டத்தட்ட புகழ்பெற்ற சிவாச்சாரியர்கள் எல்லோருமே அவரிடம் பயின்றவர்களாகவே இருப்பார்கள். வேதம் போதிப்பதில் அவர் தனக்கென ஓர் இடத்தை வகித்தார்.

மிகக் கண்டிப்பாகவும் அதே சமயத்தில் ஆணித்தரமாகவும் மாணவர்களுடைய வாயில் வேதத்தை வரச் செய்த பெரும் பெருமை

( 8 ஆம் பக்கம் பார்க்க)

# சொல் தருஞ் சுவை...

(மூன்றாம் பக்க தொடர்)

குழைந்திருக்க வேண்டும். பழக வேண்டும். தோழமையோடு இருக்க வேண்டும் என்ற பண்புகுறிக்கின்ற இத்தனை சொற்களிலும் 'ழ' கரம் வருவதை அவதானிக்கலாம்.

'ழ' கரம் சுவையானதும் கூட; பழம் என்பதிலே 'ழ' கரம் சேர்ந்து இருப்பதில் இருந்தே நீங்கள் தெரிந்து கொள்ளலாம். சில பழங்கள் சுவை குறைந்திருக்கலாமே தவிர, பழம் என்ற சொல்லிலே இருக்கின்ற சுவை ஒரு விதத்திலேயும் குறைவு படாததாகும்.

அறிஞர் அண்ணா ஒரு முறை மேற்சொன்னவாறு அழகாகக் கூறியிருந்தார்.

"துன்பம் நேர்கையில் யாழெடுத்து நீ இன்பம் சேர்க்க மாட்டாயா? அன்பிலா நெஞ்சில் தமிழில் பாடி நீ அல்லல் நீக்க மாட்டாயா? அறமிதென்றும் மறமிதென்றும் அளவிலாத போது தமிழ் இறைவனாரின் திருக்குறளிலே ஒரு சொல் இயம்பிக் காட்ட மாட்டாயா? கண்ணே இயம்பிக் காட்டமாட்டாயா?' என்று கனிவுடன் கேட்டார் பாரதிதாசன்

சொல் பற்றி, இன்சொல் பற்றி வள்ளுவர் தமது திருக்குறளில் பல இடங்களில் குறிப்பிட்டிருக்கிறார்.

"இன்சொலால் ஈந்தளிக்க வல்லார்க்குத் தன் சொல்லால் தான்கண்டனைத்திவ்வுலகு" —(387)

விரைந்து தொழில் கேட்கும் ஞாலம் நிரந்தினிது சொல்லுதல் வல்லார்ப்பெறின் —(648)

அல்லவை தேய அறம் பெருகும், நல்லவை நாடி இனிய சொலின் — (96)

நகைஈகை இன்சொல் இகழாமை நான்கும் வகை என்ப வாய்மைக் குடிக்கு — (953)

இனிமையான சொற்கள் எவற்றையெல்லாம் சாதிக்கும் என்பதை வள்ளுவர் தெளிவுபடுத்தும் விதம் இனிமையாகவே இருக்கிறது.

"சொல் நயத்தினை நாடி, நாடி, தோழியருடன் கூடிக் கூடி நன்னகர்த் திரிகூடம் பாடி பந்து அடித்தனளே வசந்த சுந்தரி" — என்று குற்றாலக் குறவஞ்சியில் சொல் நயத்துடன் வரும் பாடல் சொல் நயத்தைக் குறிப்பிடுகின்றது.

"ஒருவர் சொல்லை ஒருவர் கேட்டு பாடல் நூறு பாடலாம், பாடலாம் ஆடலாம்" — என்று கண்ணதாசன் இதையொற்றித்தான் பாடினாரோ?

சுவையான சொற்கள் உண்மையில் இனிமை சேர்க்கின்றன; இதயத்திற்கு இதமளிக்கின்றன; இன்பம் கூட்டுகின்றன; சுகமளிக்கின்றன.

துள்ளு நடை போட்டு வரும் சொற்களிலே சுவை காண்போம்.

★


**மாபெரும் மாட்டுவண்டிச் சவாரி**

செல்வா முன்பள்ளி வளர்ச்சி நிதிக்காக

இடம்: மூளாய், பொன்னாலை
காலம்: 30-08 98 ஞாயிற்றுக்கிழமை
மாலை 1 மணி.

(58765)



**JAFFNA SCIENCE ASSOCIATION**

A talk on
'Introduction to Network Operating System and Job Opportunities in Western Countries'
will be delivered by Dr. Thambirajah Vasanthakumar, a leading computer consultant in Canada,

on 01 - 09 - 98 (Tuesday)
at 10 a.m. (Sri Lankan Time)

in the Chemistry Lecture Hall I,
Mageswaran Block, University of Jaffna.
ALL ARE WELCOME

(58758) General Secretary - J. S. A.



**21 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

தோற்றம் 30 — 05 — 1914



மறைவு 30 — 08 — 1977

அமரர்
**ஆர். செல்லையா**
( ஸ்தாபகர் - சன்லைற் றைக்கிளினேர்ஸ் )

ஆண்டு இருபத்தொன்று ஆனாலும்
ஆறுமோ — எமது துயர்
எங்கள் அன்புத் தெய்வமே!
பாசமிகு தந்தையே உங்கள்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்

மருதடிலேன்,
நல்லூர்.

(58758)


# நல்வாழ்வுக்கு நல்ல...

(மூன்றாம் பக்கத் தொடர்)

வாழைப்பழம் அந்த வேப்பிலையின் கைப்பைப் பெறாதிருப்பது போலவே கர்ணனும் தன் செந்தண்மை மாறாதிருந்தான். மேலும் குந்திதேவியார் தனது தாய் என்று அறிந்த பின்பும் ஆத்திரப்படாமல் அவள்கேட்ட வரங்களைக் கொடுக்கிறான். கண்ணபிரான் அவனது பிறப்புண்மையை வெளியிட்ட பொழுதும் கர்ணன மனம் கோணவில்லை. இவ்விதம் கர்ணன், துரியோதனன் ஆகிய இரு பாத்திரங்களை ஒப்புநோக்கும் போது அறஞ்செய்வதற்கு விருபபம் தான் முக்கியம் எனபதைக் காண்கிறோம்.

நல் வாழ்வுக்கு அவசியமாகத் தேவைப்படுவது நல்ல மனமாகும். வாழ்வு நல்லதாகவும் கெட்டதாகவும் அமைவதற்கு அவரவர் மனந்தான் காரணமாகும். "மனம் போல் வாழ்வு" என்பது இதனையே குறிப்பதாகும்.

### தலைவர்களின மனம்

இதுபோலவே, தலைவர்களாக உள்ளவர்களும் பொது வாழ்வில் உள்ளவர்களும் நல்ல மனம் உள்ளவர்களாக இருப்பது தனிப்பட்ட ஒருவரிலும் பார்க்கப் பன்மடங்கு அவசியமாகிறது. தலைவர்களாக உள்ளவர்கள் தம் மனம்போன போக்கெல்லாம் போகக் கூடாது. மனம் வேறு, சொல்வேறு, செயல் வேறாக நடந்துகொள்ளக் கூடாது. அவ்விதம் வேறுபட்டு நடந்தால் மனச்சாட்சியே ஒருவனைத் தண்டித்துவிடும்.

சிலப்பதிகாரத்தில் "அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்று" ஆக வருவதைக் காட்டுகிறார் இளங்கோவடிகள். இங்கே அறம் கூற்றுவனானது எப்படி? பாண்டியனது மனம் அவன் அறந்தவறியதை எடுத்துக் காட்டும் சாட்சியாக நிற்கவே அவன் தன் பிழையை உணர அந்த அபகீர்த்தி அவனைக் கொன்றது. இதனை மக்களோ அல்லது தலைவர்களோ இன்றும்உணர்ந்ததாகத் தெரியவில்லை.

மேலும் விஞ்ஞான உலகம் இருபத்தோராம் நூற்றாண்டைப் பிடித்துவிட்ட போதும் மெய்ஞ்ஞான உலகம் முன்னேறியதாகத் தெரியவில்லை. விஞ்ஞான அறிவுகளைக் கொண்டு மனந்திரிபுபடுவதைக் காண்கிறோமன்றிப் பண்படுவதைக் காணமுடியவில்லை. நீதி என்பது ஏட்டளவில் கவனிப்பாரற்றுக் கிடக்கிறது. துர்யோதன இராச்சியந்தான் நாட்டிலும் தேசத்திலும் நடைபெறுகின்றது. அரசனெவ்வழி குடிகளும் அவ்வழி போய்க் கொண்டிருக்கிறார்கள்.

ஆகவே அறவழி வாழ்வுக்கு அல்லது சமாதான சகவாழ்வுக்கு மனம் பக்குவப்பட்டிருக்கவேண்டும். தனியாட்சி நடைபெற்ற முற் காலத்தில் நால் வகைச் சேனைகள் இருந்தன. ஆயினும் போர்க்களத்திலும் அறநெறி பேசப்பட்டது. இக்காலத்தில் மக்களாட்சி, ஜனநாயகம் என்றெல்லாம் பேசப்படுகிறது. ஆயினும் படுபயங்கரமான முப்படைகள் இருக்கின்றன. அறச்சாலையிலும் போர் முறை பேசப்படுகின்றது. இந்த நிலை மாறினால்தான் மனிதன் நாகரிகத்தில் முன்னேறியுள்ளான் என்று சொல்லமுடியும்.

புறாவின் உயிரைக்காக்கத் தராசில் ஏறி நின்ற சிபிச்சக்கரவர்த்தியாக, முல்லைக் கொடிக்குத் தேரைக் கொழுகொம்பாக நிறுத்திய பாரிவள்ளலாக, கண்ணப்பநாயனாராக இருக்கவேண்டும் என்று எதிர் பார்க்க முடியாது. சாதாரணமாக நல்ல மனமுள்ளவர்களாக இருக்கப் பயிலாவிட்டால் ஆறறிவு படைத்த மனிதன் என்று எப்படிச் சொல்லமுடியும்?

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் நல்லூர் [illegible] நூலகம்

# பட்டதாரி பயிலுநர் நியமனம் பெறும் அழகியற்கல்வி ஆசிரியர்கள் விவரம்

யாழ்ப்பாணம், ஓக. 30

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் நாளை மறு தினம் முதலாம் திகதி முதல் 61 அழகியற் கல்வி (சங்கீதம், நடனம்) பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமாப் பட்டதாரிகள் பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியர்களாக நியமனம் பெறவுள்ளனர்.

இவர்களில் —

கல்வி வலயம் ஒன்றின் கீழ் உள்ள பாடசாலைகளில் பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியர்களாக நியமனம் பெறவுள்ள 36 பேரின் பெயர் விவரம் வருமாறு:

★ ஏ. செல்வரட்ணம் (38, 1-வது ஒழுங்கை, பிறவுண் வீதி)
★ ஜெயகௌரி கோபால கிருஸ்ணன் (நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறை)
★ குகபரன் கார்த்திகேசு (தேவி வாசா, உசன், மிருசுவில்)
★ குபிதா குமாரசாமி (40/1, 2 ஆம் ஒழுங்கை, பலாலி வீதி, யாழ்.)
★ க. ப. கனகாம்பரி (199/4, கில்னர் லேன், யாழ்.)
★ க. பரமேஸ்வரி ('சோதி வாசா', ஆடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கு)
★ கி. சரோஜினிதேவி (19, கொண்டலடி லேன், நல்லூர்)
★ தேவலோஜினி குமாரவேல் (இலகடி, காரைநகர்)
★ யோகராணி கந்தையா (சளபூமி, காரைநகர்)
★ விமலகுமாரி ஸ்ரீபதிகுலம் (மாதா கோவில் ஒழுங்கை, மீசாலை மேற்கு)
★ வரதஜனனி மயில்வாகனம் (மீசாலை வடக்கு, மீசாலை)
★ ஜெயந்தினி நாகரட்ணம (218/1, பலாலி வீதி, கந்தர்மடம்)
★ பிறேமா பொன்னுத்துரை (25, கொண்டலடி லேன், நல்லூர்)
★ சர்மிளா பொன்னுத்துரை (22 (8)), பலாலி வீதி, யாழ்ப்பாணம்)
★ வரதப்பிரியா பரராஜசிங்கம் (18/4, பி. ஏ. தம்பி லேன், வண்ணார்பண்ணை)
★ வசந்தி பொன்னுத்துரை (80, யாழ். வீதி, யாழ்ப்பாணம்)
★ அஜந்தி இராமநாதன் (39/5, பிரம்படி லேன், கொக்குவில்)
★ இ. மேரிவத்சலா (30/15, கனகரத்தினம் வீதி, அரியாலை)
★ யசோதரா இராஜரட்ணம் (63/1, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்)
★ செல்வநாயகம் ஞானசொரூபன் (மே/பா. மயில்வாகனம், 284, கந்தர்மடம், யாழ்ப்பாணம்)
★ ராஜிதா சின்னத்துரை (தேவாலய வீதி, தாவடி தெற்கு)
★ ராதிகா சுதாகரன் (76, அம்மன் வீதி, கந்தர்மடம்)
★ சுகந்தி சுந்தரம் (05, பென்ரிக்கோஸ்லேன், கண்டி வீதி)
★ என். துரைராஜா )11, அன்னசத்திர ஒழுங்கை, கந்தர்மடம்)
★ சந்தானலட்சுமி த. (03, செம்மணி வீதி, நல்லூர்)
★ சவுந்தராம்பிகைதியாகராசா (கோவளம், காரைநகர்)
★ துஸ்யந்தி திருச்சிற்றம்பலம் (கொக்குவில்)
★ உதயமலர் துரைராஜா (196ஏ, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்)
★ ஸ்ரீவிக்னேஸ்வரி விக்னராஜா (28, அச்சுக்கூடலேன், கொக்குவில்)
★ ராஜீதா விநாயகமூர்த்தி (மீசாலை கிழக்கு)
★ விஜயபாரதி வெங்கடேஸ்வரன் (இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கு)
★ சூரியவதனி யோகராசா (மு. வேலுப்பிள்ளை, பெரிய நாவலடி, கொடிகாமம்)
★ வளர்மதி யோகசர்மா (17, வண்ணார்பண்ணை, வெள்ளாந்தெரு, யாழ்.)
★ வசந்தகுமாரி பாக்கியராஜா (860, கே. கே. எஸ். வீதி, யாழ்.)
★ சிவபாதரட்ணம் சிவசிவா (138/7, கந்தசாமி கோயில் வீதி, நல்லூர்)
★ எம். குணநாயகி (52, டிவாஸ் ஒழுங்கை, கிராண்ட்பாஸ், கொழும்பு- 14)

கல்வி வலயம் இரண்டின் கீழ் உள்ள பாடசாலைகளில் நியமனம் பெறவுள்ள 25 பேரின் பெயர் விவரம் வருமாறு:-

★ ஜே. ஞானகோகிலம் (வடடு, கிழக்கு, வட்டுக்கோட்டை)
★ பி. அனுசூயா (மூளாய் றோட், வட்டுக்கோட்டை)
★ ஜீ. நந்தினி (அராலி வடக்கு, வட்டுக்கோட்டை)
★ ரி. பங்கயற்செல்வி (டச் வீதி, மூளாய் சுழிபுரம்)
★ வி. சுகந்தி (இணுவில் தெற்கு, சுன்னாகம்)
★ என். சஜீதா (உடுவில் சுன்னாகம்)
★ ஏ. தாரணி (புதுத் தோட்டம், தெல்லிப்பளை)
★ கே. அழகேஸ்வரி (கோப்பாய் வடக்கு)
★ எஸ். குகநேசன் (உரும்பிராய் கிழக்கு)
★ ரி. யோகாம்பிகா (நெல்லியேர்டை, அச்சுவேலி தெற்கு)
என். நவமலசேகரி (நெல்லியோடை, அச்சுவேலி தெற்கு)
★ என். ஜெயகௌரி (கரவெட்டி கிழக்கு)
★ எஸ். மாசிலாமணி (கரவெட்டி கிழக்கு)
★ சி. கௌரி (தும்பளை, பருத்தித்துறை)
★ ரி. ஹேமநந்தினி (அரியாலை, மதி, யாழ்ப்பாணம்)
★ எம். குணநாயகி (கிராண்பாஸ், கொழும்பு 14)
★ எம். யசோதா (சங்கானை மேற்கு)
★ ஆர். சசிகலா (அராலி மதி)
★ எஸ். சுசிலா (மாலிகாவத்தை கந்தானை)
★ எஸ். ஸ்ரீதேவி (பொன்னாலை மேற்கு)
★ கே. சுபத்திரா (சண்டிலிப்பாய் வடக்கு)
★ ஆர். துஸ்யந்தி (புளியடிச்சந்தை ஒழுங்கை, மானிப்பாய் தெற்கு)
★ பி. மலர்விழி (மாவட்டவைத்தியசாலை, தெல்லிப்பளை)
★ என். திலகராணி (ஸ்ரீதிலகா, நெல்லியடி, வடக்கு)
★ வை. வாசுகி (இணுவில் மேற்கு).

(ஐ-7-5)


## சின்னஞ்சிறு விளம்பரம்

### வீடு விற்பனைக்கு

நலலூர் கந்தசுவாமி கோயிலுக்கு அண்மையில் நாயன்மார் வீதியில் அமைந்துள்ள மின்சாரம், குழாய் நீர் முதலிய சகல வசதிகளும் உடைய விசாலமான வீடும் அருகிலுள்ள சிறிய வீடும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இரத்தினதுரை, 29, நாயன்மார் வீதி, நல்லூர். [58746]

### கோழிக்குஞ்சு விற்பனை

பிறிமா கைலைன் பிறவுண் பேட்டுக்குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. பதிவு செய்தோரும் மற்றும் தேவைப்படுவோரும் பெற்றுக் கொள்ளவும். மல்லிகா பதி, சந்தைகிழக்குஒழுங்கை, மானிப்பாய். [58753]

### இறைச்சிக் கோழி

உயர்ரக இறைச்சிக்கோழி விற்பனைக்கு உண்டு. தொடர்பு; இல. 101, பலாலி வீதி, இலுப்பையடிச் சந்தி அருகில், யாழ்ப்பாணம். [58737]

இறைச்சிக்கோழி (Broilers) விற்பனைக்கு உண்டு. தினமும் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு:- 40, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (58760)


## இறுதி ஆட்டமும் பரிசளிப்பும்

பருத்தித்துறை இலங்கை வங்கிக்கிளையின் ஆதரவில் தும்பளை நாவலர் விளையாட்டுக் கழகத்தினரால் பருத்தித்துறை பிரதேச மட்டத்தில் நடத்தப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டமும் பரிசளிப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை தும்பளை கணக்கிலாவத்தை விளையாட்டு மைதானத்தில் கே. பி. ஆனந்த நடேசன் தலைமையில் நடைபெறவுள்ளன.

பரிச்ளிப்பு விழாவில் பருத்தித்துறை இலங்கை வங்கி முகாமையாளர் சி. நடராஜலிங்கம் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஐ-173)


உ

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான வெகுதானிய வருடம் ஆவணி மாதம் 18ஆம் நாள் [03 - 09 - 98] வியாழக்கிழமை பகல் 9-46 தொடக்கம் 11-22 வரை வரும் சுபமுகூர்த்த வேளையில்,

எமது புதல்வன் திருநிறை செல்வன் **நிமலன்** (மாநகரசபை, யாழ்ப்பாணம்) அவர்களுக்கும்



எமது புதல்வி திருநிறை செல்வி **செல்வமதி** அவர்களுக்கும்

சாவகச்சேரி கல்வயலில் உள்ள மணமகள் இல்லத்தில் இறைவன் திருவருள் துணை கொண்டு திருமாங்கல்ய தாரணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சமேதராய் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு வேண்டுகிறோம்.

[இரு வீட்டார் அழைப்பு]

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

திரு. திருமதி வெ. பசுபதி
12, 4 ஆம் ஒழுங்கை,
அரசடி வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

திரு. திருமதி அ. செல்வராசா
[illegible]
சாவகச்சேரி.

(58621)

## வாழ்த்துகின்றோம்

கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் பன்னாலையை வதிவிடமாகவும் கொண்டு மக்கள் சேவையில் மட்டற்ற மகிழ்ச்சியடையும் சமூகத் தொண்டன் —

கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை, ஸ்கந்தவரோதயக் கல்லூரி பழைய மாணவன் —

**திரு. செல்லத்துரை மகாதேவா**

அவர்கள்

அகில இலங்கைச் சமாதான நீதிவானாக நியமனம் பெற்று சத்தியப் பிரமாணம் செய்து கொண்டதையிட்டு மனமகிழ்ச்சியுடன் வரவேற்று, வாழ்த்திப் பாராட்டுகிறோம்.

கந்தரோடை-பன்னாலை
மக்கள்.

(சி/4687)

## பொருளியற் கல்லூரி

(சென். ஜோன்ஸ் கல்லூரி முன்பாக)
சுண்டுக்குளி

பொருளியல் S. வரதராஜன்

A/L 99

| | | |
|---|---|---|
| செவ்வாய் 4 - 5<br>புதன் 3 - 4 | ] | வரவு செலவுத் திட்டம் |
| செவ்வாய்<br>வியாழன் 5- 6 | ] | வினாவிடை |
| வியாழன் 4 - 5<br>வெள்ளி 5 - 6 | ] | பணமும் வங்கியும் |

ஆரம்பம் 01 - 09 - 98 செவ்வாய்

A/L 2000 புதிய பிரிவு
ஆரம்பம் 02 - 09 - 98 புதன் 4-00

A/L 99 DAY CLASS
ஆரம்ப அலகிலிருந்து கற்பிக்கப்படும்
ஆரம்பம் 02 - 09 - 98 புதன் 10-00

(58728)

## கண்ணீர்ப் பூக்கள்

எமது கல்வி நிறுவன நிர்வாகி
திரு. அற்புதராஜா
அவர்களின் அன்புத் தந்தையார்

**பொன்னையா தியாகராஜா**

(இ. போ. ச. D. I)

அவர்கள் 29-08-1998 அன்று மீளாத்துயில் கொண்டதையிட்டு கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாகச் செலுத்துவதுடன் அவரது இறப்பினால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மாணவர்கள்,
எலைற் கல்வி நிறுவனம்.

(58781)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலமைப்பரிசில் - 99

**விசேட வகுப்புகள் ஆரம்பம்**
**01 - 09 - 98 பி. ப. 3 மணி**

★ வாராந்த பயிற்சிப்பரீட்சைகள்
★ செய்முறையுடன் கூடிய விளக்கங்கள்
★ அச்சடித்த இலவச பாடக்குறிப்புகள்
★ பொதுஅறிவு, பொதுஉளச்சார்பு வகுப்புகள்
★ பெறுமதி மிக்க மாதாந்த பரிசில்கள்

முதலாவது பரீட்சை 06 - 09 - 98 மு.ப 9.00மணி
ஆண்டு 6, 7, 8, 9, 10, O/L வகுப்புக்களும் ஆரம்பமாகியுள்ளன.


# IBS

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அருகில்

(58740)


## நன்றி நவிலலும் 31 ஆம் நாள் நிகழ்வுக்கான அழைப்பும்

| மண் கூட்டுக்குள் | | விண் கூட்டுக்குள் |
|---|---|---|
| 07 | | 31 |
| 07 | | 07 |
| 1933 | | 1998 |



## அமரர் நாகர் மாணிக்கம்

எமது குடும்பத் தலைவரின் இறுதி நிகழ்வுகளில் நேரில் பங்குகொண்டவர்களுக்கும், இரங்கலுரை நிகழ்த்தியவர்களுக்கும், எமக்கு ஆறுதல் கூறி எமது துன்பத்தில் பங்குகொண்டவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவிக்கிறோம்.

30 — 08 — 98 ஞாயிறு எமது இல்லத்தில் நிகழும் 31 ஆம் நாள் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி நேசமணி.

உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.

(58742)

## குஜராத் மிஷன் தலைவர் விஜயம்

மட்டக்களப்பு, ஒக. 30

குஜராத் மாநில ராஜ்காட ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன தலைவர் சுவாமி ஜித்தாத்மானந்தாஜி கடந்த வெள்ளிக்கிழமை இலங்கை அரசின் அழைப்பையேற்று மட்டக்களப்புக்கு விஜயம் செய்துள்ளார்.

சுவாமி ஜித்தாத்மானந்தாஜியை வரவேற்கும் நிகழ்வு கடந்த வெள்ளியன்று மட்டக்களப்பு சித்திர வேலாயுதனார் ஆலயத்துக்கு அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் ஜீவனானந்தாஜி, மட்டக்களப்பு மேஜர் செழியன் பேரின்பநாயகம், நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் சுவாமி ஜித்தாத்மானந்தஜி சொற்பொழிவாற்றினார். (ஜ-8-9)

## சந்நிதி உற்சவ கால நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், ஒக. 30

தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலய உற்சவ காலத்தையொட்டி சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை ஆச்சிரம மண்டபத்தில் ஒழுங்கு செய்துள்ள தெய்வீகக கலை நிகழ்ச்சிகளில்—

இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10-30 மணிமுதல் சி. தில்லைமணியின் பண்ணிசைக் கச்சேரி நடைபெறவுள்ளது. (ஜ-8-30-173)


## புலமைப்பரிசில்'99

முதலாவது புலமைப்பரிசில் பரீட்சை (1999) யும், மாதாந்த பயிற்சிப் பரீட்சையும் 30-08-98 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

# BOND

யாழ். நகர்.

(58744)



## T. V. BUYING, SELLING ANTENA FITTING & REPAIRING

T. V. Which are in good conditions will be bought; used and damaged T. V also can be bought for Spareparts.
(Speacilist in T. V Repairs & Antena Fitting)

# VEENUS DELKA

284, Stanley Road, Jaffna.
Telephone: 2064
Branch: Bus Stand, Chavakachcheri.

(C/4679)


## வலிகாமம் தெற்குபிரதேசசபை-சுன்னாகம்

**சுன்னாகம் மின் சந்தையில் அமைந்துள்ள ஆட்டிறைச்சிக்கடையை 09 - 09 -98 இல் இருந்து 31 - 12 - 98 வரையான காலப் பகுதிக்கு குத்தகைக்கு விடுவதற்கான**

## பகிரங்க ஏலம்

மேற்படி விடயம் தொடர்பாக ஏலம் 1998-09-04 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு. ப 10.00 மணிக்கு எமது அலுவலகத்தில் நடைபெறும். ஏலத்தில் பங்குபற்ற விரும்புபவர்கள் மீளளிக்கக்கூடிய வைப்புப்பணம் ரூபா 500 உம் மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா 100 உம் செலுத்துதல் வேண்டும். இக்கட்டணங்கள் யாவும் 1998 - 09 - 03 ஆம் திகதி பி. ப. 2.00மணிக்கு முன் இவ்வலுவலகத்தில் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

தீ. மா. செல்வராஜா
தலைவர்
வலி.தெற்கு பிரதேசசபை.

வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்,
28 - 08 - 98

(சி-4688)

## ST. JOHN'S COLLEGE, JAFFNA CHUNDIKULI GIRLS' COLLEGE, JAFFNA

# ADMISSION - 1999

1. பின்வரும் வகுப்புகளில் வெற்றிடங்கள் உள.
   **ஆண்டு 1, ஆண்டு 6**
2. (அ) விண்ணப்பப் படிவங்களை அவ்வக் கல்லூரிகளிலிருந்து 01-09-1998 முதல் 15-09-1998 வரை பெற்றுக்கொள்ளலாம்.
   (ஆ) எக்காரணம் கொண்டும் 15-09-1998-க்குப் பின் விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்படமாட்டாது.
   (இ) எமது விண்ணப்பப் படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
   (ஈ) விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 21 - 09 - 1998. அத்திகதிக்குப் பின் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டாது.
3. பிழையாக நிரப்பப்பட்டவையும், பூரணமாக நிரப்பப்படாதவையுமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம்.
4. ஆண்டு ஒன்றுக்கான விண்ணப்பப்படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி (போட்டோ ஸ்ரற் கொப்பி) இணைக்கப்பட வேண்டும்.
5. விண்ணப்பப் படிவங்களை ஞாயிறும், விடுமுறையும் தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை ஒன்பது மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை அவ்வக் கல்லூரிகளில் பெற்றுக் கொள்ளலாம்.
6. ஒரு படிவத்திற்கான கட்டணம் ரூபா 250
7. வயதெல்லைகள்:—
   அ) ஆண்டு ஒன்று — விண்ணப்பதாரி 01-02-93 க்கும் 31 - 01 - 94 க்கும் இடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
   ஆ) ஆண்டு ஆறு — விண்ணப்பதாரி 01-02-88 இல் அல்லது அதற்குப் பின் பிறந்திருத்தல் வேண்டும்.
8. பிரவேசப் பரீட்சை:—
   சென். ஜோன்ஸ் கல்லூரி:
   ஆண்டு ஆறு வகுப்புக்கு 0 3 - 10 - 98 காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும்.
   சுண்டுக்குளி மகளிர் கல்லூரி:
   ஆண்டு ஆறு வகுப்புக்கு 17 - 10 - 98 காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும்.
9. ஆண்டு 10, 11 வகுப்புகளுக்கான விண்ணப்பங்களையும் காரியாலயத்தில் இதே நாள்களில் பெற்றுக்கொள்ளலாம். பரீட்சை மார்கழியில் நடத்தப்படும்.

விவரங்கள் பத்திரிகை வாயிலாக அறிவிக்கப்படும்.

— அதிபர்கள்

(சி/4434)


உ
சிவமயம்

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான வெகுதானிய வருடம் ஆவணி மாதம் 18 ஆம் நாள் (03 - 09 — 1998) வியாழக்கிழமை பகல் 9-00 மணியளவில் வரும் சுபமுகூர்த்த வேளையில்

எமது புத்திரன்
திருநிறை செல்வன்
**துஷ்யந்தன்**
**(கண்ணன்)**
அவர்களுக்கும்



எமது புத்திரி
திருநிறை செல்வி
**சாமினி**
அவர்களும்

திருவருள் துணைகொண்டு திருமணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து மணமக்களை ஆசிர்வதித்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமண மண்டபம்;
Orchard Building
77/2, 2nd Floor Galle Road, Colombo - 6, Sri Lanka.

இங்ஙனம் தங்கள் நல்வரவை விரும்பும்

திரு திருமதி வரதராஜா
தில்லைகட்டி லேன்,
சுன்னாகம்.

திரு. திருமதி சிவயோகநாதன்
மயிலணி லேன்,
சுன்னாகம்.

(இரு வீட்டார் அழைப்பு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் ... நல்லூர் ... நூலகம்

# உதயன்

## ஒளிப்பு மறைப்பு ஆகாது!

செம்மணிப் புதைகுழி விவகாரத்தில் அரசாங்கம் சற்று நகர்ந்திருக்கிறது! புதை குழிகள் உள்ளதாகக் கருதப்படும் இடங்களைத் தோண்டி உண்மையைக் கண்டறிவதற்கு அரசாங்கம் உத்தியோக பூர்வமாக முடிவு செய்திருக்கிறது.

புதைகுழிகள் தோண்டுவதில் கை தேர்ந்த நிபுணர்கள், புலனாய்வாளர்கள், இரசாயனப் பகுப்பாய்வாளர்கள், இராணுவக் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ ஆகியோர் செம்மணிக்கு வருவதற்கும்—

புதைகுழிகளைத் தோண்டுவது, அதன் விவரங்களைக் கண்டறிதல் தொடர்பான ஏனைய நடவடிக்கைகளைச் செயற்படுத்துதல் ஆகிய வேலைகளை முன்னெடுப்பதற்கும் செய்வதற்கும் சட்டமா அதிபர் அனுமதி வழங்கியிருக்கிறார்.

செம்மணிக்கு வரும் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷவுக்கும் ஏனையோருக்கும் தகுந்த பாதுகாப்பு அளிக்கவும் உத்தர விடப்பட்டிருக்கிறது.

இந்த அளவிலேனும் செம்மணிப் புதைகுழி விவகாரத்தை முன்னெடுப்பதற்கு அரசு முன்வந்திருப்பது திருப்தி தருகிறது.

குடாநாட்டில் இன்னும் இரண்டு, மூன்று வாரங்களில் மழை ஆரம்பமாகிவிடும். அதற்கு முதல் புதைகுழிகள் தோண்டும் பணியை ஆரம்பித்து விட வேண்டும். ஆகக்கூடியது இன்னும் மூன்று நாள்களில் செம்மணிப் பிரதேசம் சுறுசுறுப்பு அடைய வேண்டும்.

அரச தரப்பின் வேகம் குறைந்து காணப்பட்டதால் குடாநாட்டு மக்கள் அதன் மீது சந்தேகம் கொண்டுள்ளனர். இது விடயத்தில் தமிழ்க்கட்சிகளின் அழுத்தம்போதாது; அவையும் மறைமுகமாக அரசுக்குத்துணைபோகின்றனவோ என்ற ஐயமும் உண்டு. இவற்றை உணர்ந்துபணிகளை விரைவாக்குவது அவசியம்.

மேற்கூறிய சந்தேகமும், ஐயமும் நீங்க வேண்டுமெனில் செம்மணிப் புதைகுழிகள் தோண்டுவது சம்பந்தமான செயற்பாடுகள் திறந்த மனதுடன் செய்யப்பட வேண்டும்.

புதைகுழிகள் தோண்டப்படும் போது கண்காணிப்புத் தேவை. உண்மையைக் கண்டறியும் நேர்மையுடன் வேலைகள் நடைபெறுகின்றன என்று மக்கள் திருப்தி கொள்ளத்தக்கதாக அவை அமைவது அவசியம்.

சடலங்களைத் தேடும் பணிகள் குடாநாட்டில் உள்ள மக்கள் அமைப்புகளின் பிரதிநிதிகளின் — உள்ளூர் பிரதிநிதிகளின் — பிரசன்னத்தில் நடைபெறவேண்டும். இது மிகவும் இன்றியமையாதது.

புதைகுழிகளைத் தோண்டுவதால் உண்டாகும் பெறுபேறுகள் உடனுக்குடன் மக்களுக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும்; ஒளிப்பு மறைப்புகள் இருக்கக் கூடாது என்பது இரண்டாவதாகும்.

பாரதூரமான இந்த விவகாரத்தில் தில்லுமுல்லுகள், ஒழுங்கீனங்கள், பாரபட்சமான போக்குகள் தலை தூக்காது பார்த்துக் கொள்வது மிகப் பிரதானமானதாகும்.

# தொழிற்சாலை கட்டளைச் சட்டம் முறையாகப் பின்பற்றப்படுவதில்லை

## பரிசோதனை பொறியியலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 30

யாழ். மாவட்டத்தில் தற்போது செயற்பட்டுக் கொண்டிருக்கும் தொழில் நிறுவனங்களில் தொழிற்சாலைக் கட்டளைச் சட்டம் முறையாகக் கடைப் பிடிக்கப்படுவதில்லை.

வடமாகாண தொழிற்சாலைகள் பரிசோதனைப் பொறியியலாளர் இ. மகேந்திரராஜா இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்யும் தொழில் நிறுவனங்கள், அபிவிருத்தி தொழில் நிறுவனங்கள் என இரு வகையான தொழில் நிறுவனங்கள் இயங்கி வந்தன.

கடந்த காலத்தில் இடம்பெற்ற வன்செயல்கள் காரணமாக அபிவிருத்திதொழில் நிறுவனங்கள் முற்றாகச் செயலிழந்து விட்டன. இந்த நிறுவனங்களை மீண்டும் இயங்குவதற்கு மூலப் பொருள்களை பெறமுடியாதுள்ளதுடன் மின்சார வயதியும் இல்லை. இதனால் தற்பொழுது அன்றாடத் தேவைகளை பூர்த்தி செய்யும் நிறுவனங்கள் சில இயங்கி வருகின்றன.

இந்தத் தொழில்நிறுவனங்களில் தொழில் செய்வதற்கான பாதுகாப்பு உபகரணங்கள் பயன்படுத்தப்படுவது குறைவாக உள்ளது.

ஒரு தொழில் நிறுவனத்தில் தொழில் செய்யும் தொழிலாளி பாதுகாப்பு உபகரணங்களைப் பயன்படுத்தி தொழிலில் ஈடுபடுவது அந் நிறுவனத்தின் உரிமையாளருக்குத்தான் நன்மை தரும் செயலாகும்.

தொழிலாளி பாதிக்கப்பட்டால் அல்லது காயமடைந்தால் நிறுவன வேலைகளில் பாதிப்பு ஏற்படும் என்பதை நிறுவன அதிபர்கள் உணர வேண்டும் – என்றும் அவர் மேலும் கூறினார்.

(ஐ-5)

## காண்ஸ்டபிள் கைது!

கொழும்பு, ஓக. 30

கொழும்பில் பல கொள்ளைகளுடன் தொடர்புடையவர் எனக் கருதப்படும் சிங்களப் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவரைப் பொலீஸார் கைது செய்திருக்கின்றனர். களனிப் பிரதேசத்தில் இடம்பெற்ற பல கொள்ளையுடன் இவருக்கு நேரடியாகத் தொடர்பு இருப்பதாக சந்தேகிக்கப்படுகின்றது.

(உ)

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஓக. 30

ஆவரங்கால் கிழக்கு லிங்கன் மத்திய சனசமூக நிலைய லிங்கன் பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல ஒரு மணிக்கு மேற்படி பாடசாலை மைதானத்தில் பொ. தம்பிராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் சர்வோதய செயற்பாட்டு நிறைவேற்றுனர். எஸ். வி. சங்கரப்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

(ஐ-8)

## இலவச கணனி வகுப்பு

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி முறைசாராக் கல்விப் பிரிவினரால் இலவச கணனி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இப் பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ளத் தெரிவு செய்யப்பட்டவர்களை எதிர் வரும் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற் பகல் 10மணிக்கு சமுகமளிக்குமாறு அதிபர் கேட்டுள்ளார்.

பிறப்புச் சான்றிதழ், பாடசாலை விடுகைப்பத்திரம், நற்சான்றிதழ், கல்விச் சான்றிதழ் ளின் மூலப்பிரதிகளையும், போட்டோ பிரதிகளையும் எடுத்து வருமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை-

நடைபெற்று முடிந்த உயர்தரப்பரீட்சைக்குத் தோற்றிய மத்தியகல்லூரி உயர்தர வகுப்பு மாணவர்கள் அனைவருக்கும் கணனி, மற்றும் ஆங்கிலப் பயிற்சி வகுப்புக்களை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும்—

எனவே சகல மாணவர்களையும் எதிர்வரும் 4 ஆம் திகதி கல்லூரியில் சமுகமளிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (ஐ)

## மாணவி மரணம்

யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகத்தின் மாணவி ஒருவர் நஞ்சருந்தித் தற்கொலை செய்துள்ளார்.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஜெயகுமாரி (வயது 25) என்ற பெண்ணே தற்கொலை செய்தவராவார்.

இப் பெண்ணின் சடலம் வவுனியா ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

(உ-9164)

## விமானம் மூலம்

# 75 கிலோ தபால்கள் யாழ்.நகருக்கு வருகின்றன

யாழ்ப்பாணம், ஓக. 30

கொழும்பிலிருந்து தினமும் 75 கிலோ தபால்கள் யாழ்ப்பாணத்திற்கு விமானம் மூலம் அனுப்பி வைக்கப்படுவதாக யாழ். அஞ்சல் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதே போன்று யாழ்ப்பாணத்திலிருந்து தினமும் 50 கிலோ தபால்கள் விமான மூலம் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

பதிவுத்தபால்கள் தவிர்ந்த சாதாரண தபால்கள் தினமும் விமான மூலம் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் சேவை நிறுத்தப்பட்டதால் பதிவுத் தபால்களை மட்டும் கொழும்புக்கு அனுப்ப முடியாத நிலையேற்பட்டுள்ளதாகவும் ஏனைய தபால்கள் விமானம் மூலம் தினமும் அனுப்பப்படுகிறது என்றும் அஞ்சலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ஐ-5)

### நாளை

ஆவணி - 15

திங்கட்கிழமை

திதி: நவமி

முன்இரவு 09.36 வரை.

நட்சத்திரம்: கேட்டை

மாலை 06.09 வரை.

சுபநேரம்: 12.05 - 01.35

ராகுகாலம்: 07.35 - [illegible]

(பகலுக்கும் இரவுக்கும் [illegible] பழையநேரப்படி)

### உதயவாக்கு

ஆன்மீகம் எமக்கு உண் [illegible]

-சுவாமிவிவேகானந்தர்

## விபத்தில் சிறுமி காயம்

யாழ்ப்பாணம், ஓக. 30

யாழ்ப்பாணம் செனபற்றிக்ஸ் வீதியில் நேற்று இடம்பெற்ற சைக்கிள் விபத்தில் 5 வயதுச் சிறுமி தலையில் காயமடைந்தார்.

மோகனதாஸ் சுமித்திரா (வயது 5) என்ற சிறுமியே காயமடைந்தவராவார்.

அருகில் உள்ள கடைக்குச் சென்றுவிட்டுத் திரும்பிய வேளையே விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்பட்டது. இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ஐ-15)

## வாசகர் திருமுகம்

### இழந்த நஷ்டத்தை ஈடு செய்வது பொது மக்களிடமா?

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை யாழ். மாவட்ட மக்கள் பல இன்னல்கள், துன்பங்கள், துயரங்கள் மத்தியில் வாழ்ந்தவர்கள். இவர்களில் பெரும்பாலானோர் அன்றாட சாப்பாட்டுப் பிரச்சினையால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள். அதற்குக் காரணம் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த வர்த்தகர்கள் என்றுகூறுவதில் தப்பில்லை.

தாங்கள் கொள்முதல் செய்த பொருள்களை கொள்முதல் விலையிலும் பார்க்க அதிக வீதம் விலையேற்றி பொருள்களை விற்று எத்தனையோ மக்களை திண்டாட வைத்தவர்கள். உதாரணமாக பிறின்ஸஸ் கஷ் என்ற கப்பல் யாழ் நோக்கிப் புறப்படுவதற்கு முதல் 515 ரூபா வீதம் விற்ற சிமெந்தை திடீரென 650 ரூபா, 700 ரூபாவாக விற்கின்றார்கள். இது ஏன்? தாங்கள் கப்பலால் இழந்த நஷ்ட ஈட்டைப் பெறுவதற்கா? அதை மக்களிடமா பெற வேண்டும்?

யாழ். மக்கள் அதிக விலை கொடுத்து பொருள்களை வாங்கும்போது யாழ்ப்பாணத்தில் இயங்கும் சகல வர்த்தக சங்கங்களும் என்ன செய்கின்றன? மக்கள் நலனைப் பேண முடியாத வர்த்தக சங்கங்கள் இயங்க வேண்டுமா?

ஆகவே தயவு செய்து நஷ்ட ஈட்டை மக்களிடம் பெற வேண்டாம் என்றும், கொள்முதல் செய்த பொருள்களை விலை ஏற்ற வேண்டாம் என்றும் மிகவும் தயவுடன் சகல வர்த்தக சங்கங்களையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

திருநெல்வேலி, வ. மயில்வாகனம்

### பாரபட்சம் ஏன்?

வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் வேலையற்ற பட்டதாரிகள் நலனில் அக்கறைகொண்டு 94/96 பட்டதாரிகளை உள்வாங்கி போராடி வருகிறது. ஆனால் மேற்படி சங்கம் கூட்டுறவுத்துறையில் சில நியமனங்களை தமது முக்கிய உறுப்பினர்களுக்கு வழங்கி பாரபட்சம் காட்டியுள்ளது.

திட்டமிடல் பிரிவில் கூட்டுறவுத் துறையில் யாழ். செயலகத்தைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர், தற்காலிக நியமனம் இருப்பதாகவும் சில பெயர்களைத் தருமாறும் சங்கத்திடம் கேட்டிருந்தார்.

ஆனால் வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள கஷ்டப்படும் உறுப்பினர்களைப்புறந்தள்ளி விட்டு தனது நிர்வாக உறுப்பினர்களை அந்த வெற்றிடத்துக்கு நியமனம் செய்ய பரிந்துரைத்தது. இப்படிப் பரிந்துரைக்கப்பட்டு வேலை கிடைத்த சிலருக்கு இன்று ஆசிரியநியமனம் கிடைத்து விட்டது. இதனால் அவர்கள் கூட்டுறவுத் துறையில் கிடைத்த நியமனத்தைக் கைவிட்டு விட்டனர்.

எமக்காக போராடுவதாகக் கூறிக் கொண்டு அந்த நியமனங்களை வீணடித்தது நியாயமா? வேலியே பயிரை மேய்ந்தால?

வேலையற்ற பட்டதாரிகளுக்கு சில மாதங்களுக்கு முன்னா நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டு பெறுபேறுகளின் அடிபபடையில் 1994 ஆம் ஆண்டில பட்டம் பெற்றவர்களுக்கும், 1996 ஆம் ஆண்டு விஞ்ஞானப் பட்டதாரிகளுககும் நியமனம் வழங்கப்பட்டது.

ஆனால் 1996 ஆம் ஆண்டில் கலைத்துறையில் சித்தியடைந்தவர்கள சிலரும் உள் வாங்கப்பட்டிருக்கின்றனர். திருகோணமலை அலுவலகத்துடன் தொடர்பு கொண்ட போது — 1996 இல் விசேட பாடத் திறமைச் சித்தி அடைந்தவரை இனங்கண்டு நியமனம் வழங்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இவற்றில் உண்மை என்ன வென்றால் அதி திறமைச் சித்தி பெற்று தங்கப் பதக்கம் பெற்றவர் கூட நியமனம் இல்லாது இருக்க அதி தரத்திலும் கீழிருந்தவர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர். பின கதவுகள நியமனங்களைத் தீர்மானிக்கின்றன போலும்.

இதில் வேதனை தரும் விடயம் வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் இதைக்கண்டு மௌனமாக இருப்பதே ஆகும்.

தவறுகள் தட்டிக் கேட்கப்படவேண்டியவை! மேற்படி சங்கம் நீதி தவறி நடப்பது ஏன்?

- வேலையற்ற பட்டதாரி

மீசாலை கிழக்கு,
மீசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூக உறவுகளில்,..

(4 ஆம் பக்கத்தொடர்)

ஊழியம் செய்வது ஆண்டவருக்கே: நம்பிக்கை கொண்டவர்களாக மகிழ்ச்சியோடு இருங்கள். வேதனையிலும் மனஉறுதியோடு இருங்கள். செபத்தில் நிலையாய் இருங்கள்: வறுமையுற்ற இறைமக்களோடு உங்களுக்குள்ளதைப் பகிர்ந்து கொள்ளுங்கள்: விருந்தோம்பலில் கருத்தாயிருங்கள்.

"உங்களைத் துன்புறுத்துவோருக்கு ஆசி கூறுங்கள்; ஆம், ஆசி கூறுங்கள்; சபிக்க வேண்டாம்: மகிழ்வாரோடு மகிழுங்கள்; அழுவாரோடு அழுங்கள்: உங்களுக்குள் ஒன்றுபட்டு வாழுங்கள்" உயர்வு மனப்பான்மை கொள்ளாமல் தாழ்ந்தவர்களோடு அன்பாய்ப் பழகுங்கள். நீங்கள் அறிவாளிகளென்று பெருமிதம்கொள்ள வேண்டாம்: பழிக்குப் பழி வாங்காதீர்கள். மனிதர் அனைவர் முன்னிலையிலும் நன்மதிப்பை இழக்காதபடி பார்த்துக்கொள்ளுங்கள். கூடுமானால் இயன்ற அளவு எல்லாரோடும் நட்பமைதியுடன் வாழுங்கள்;" (உரோமர் 12 . 09: 19).

இந்த அறிவுரை மூலமாக கீழே நின்ற அன்பினைச் சுவைத்து, அயலானிடமும் அன்பினைப் பகிரும் போது, ஆண்டவனின் திருக்குடும்ப நட்புறவை நாமும் அனுபவிக்கலாம்: அன்புறவிலே அகிலத்தை நிரப்பி அன்பியத்தில் அகமகிழலாம்; ★


### ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானம்

### செங்கற்கள் தேவை

ஆலய நிர்மாண வேலைகளுக்கு
செங்கற்கள் தேவை.

வைத்திருப்போர் உடன் தொடர்பு கொள்ளவும்;

தர்மகர்த்தா சபை,
ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானம்,
புலோலி.

(சி/ 4690)


## வேதபோதனையில்....

(4 ஆம் பக்கத்தொடர்)

அவருக்குண்டு. அவரிடம் கல்விகற்ற சிவாச்சாரியர்கள் பலர் இலங்கையிலும், வெளிநாட்டிலும் சிறப்பாகப் பணி புரிகிறார்கள். பல சிவாச்சாரியர்கள் அவர் வேத பாராயணஞ் செய்யும்போது உற்றுக்கேட்டு தெளிந்திருக்கிறார்கள்;

வாத்தியாரய்யா அவர்கள் யாழ்ப்பாணம், கொழும்பு, மலேஷியா, சிங்கப்பூர் முதலிய எல்லா இடங்களிலும் நடைபெற்ற மஹாகும்பாபிஷேகங்களில் சர்வசாதகராகப் (மகாகும்பாபிஷேகத்தை நடத்தி வைப்பவராகப்) பணியாற்றி இருக்கிறார். பல அந்தணப்பெருமக்களுக்குகுருப்பட்டம்அளித்து அவர்கள் நடத்தி வைக்கும் மஹோற்சவத்திற்கு அவர்கட்கு தெளிவுறக் கிரியைகளைப் போதித்துவழி நடத்தியிருக்கிறார். அவர் ஒரு சபைக்கு வந்தால் அவருக்கு முதல் இடமளித்து பின்னின்று செயற்படுவதையே எல்லோரும் விரும்புவார்கள்.

அத்துணைச் சிறப்புபெற்ற அவர்கள் பிரம்மஸ்ரீ சீதாராமசாஸ்திரிகள், சிவஸ்ரீ கா. கைலாசநாதக் குருக்கள் முதலிய பெரியார்களோடு உரையாடும்போது அவர்களது கலந்துரையாடலைக் கேட்கவே எமக்கு ஆனந்தமாக இருக்கும். சுன்னாகம் சதாசிவபிராசீன பாடசாலை கணபதீஸ்வர குருகுலம், சிவானந்தகுருகுலம், இராமநாதன் வேதாகம ஆய்வு நிறுவனம் முதலிய பல பாடசாலைகளில் அவர் வேதாகமக் கல்வியைப் போதித்திருக்கிறார்.

வேதத்தின் சிகரமாக விளங்கிய அவர்இன்று நம்மிடம்இல்லை. அவர் விட்டுச் சென்ற இடத்தையும் நிரப்புவதரிது. ஆனால் அவர்தமது மாணவர்களிடம் விட்டுச் சென்றிருக்கும் கல்வி ஒரு பாரம்பரியத்தை உருவாக்கு மென்பதில் சந்தேகமில்லை;

சிவஸ்ரீ
தா.மகாதேவக் குருக்கள் ★


### கண்ணீர் அஞ்சலி

எம்மினிய சக ஆசான்தன் அன்பு மிளிர் உற்ற தந்தை

### பொன்னையா தியாகராசா

எனும் தியாக தீபமே!
அயலவர் அக மகிழ் நல்விளக்கே!
ஊருக்கிருந்த கனிதரு விருட்சமே!
காத்திருந்த காளானின் கண்பட்ட நாளிதோ?

புண்பட்ட எம் மனம்
சோர் வற்ற உம் வதனம் காணும்
நாள் எப்போதோ?

29-08-98 இல் மரணமடைந்த எமது சக ஆசிரியர் தி. அற்புதராஜா அவர்களின் அன்புத் தந்தையார் பொ. தியாகராசா (D I) அவர்களின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கின்றோம்;

சக ஆசிரியர்கள்
எலைற் கல்வி நிறுவனம்

192, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்;

(58764)



# J. C. I. T.

## ★ A Name trusted for its Excellent Service!

## ★ Study and obtain OPEN UNIVERSITY EXEMPTIONS!!

## ★ In the heart of the town

## ★ Avoid transport problems and Unnecessary Risks

(1) Diploma in Computer Programming & Data Processing
( Including MS - EXCEL & MS – ACCESS )
( One year – Full time ) — JAFFNA CENTRE
ENTRY QUALIFICATION: 6 passes in the G. C. E. (O/L) including Credit in Maths and pass in English.

(2) Certificate Courses = Jaffna Centre
☐ MS EXCEL ☐ C ++ ☐ d BASE III + ☐ MS WORD
☐ PASCAL ☐ MS ACCESS ☐ VISUAL BASIC
( 3 Months Duration ) Morning / Afternoon on Weekdays.
ENTRY QUALIFICATION: 6 passes in the G. C. E. ( O/L ) including Credit in Maths and pass in English.

(3) Diploma in Draughtsmanship (Civil) - Jaffna Centre
One year full time
ENTRY QUALIFICATION: 6 Passes in the G.C.E. (O/L) including Credit in Maths and pass in English

(4) Diploma in Electronics & Telecommunication Engineering (Jaffna Centre)
One year full time
ENTRY QUALIFICATION: 6 Passes in the G. C. E. (O/L) including Credit in Maths and Pass in English

(5) Australian Computer Society Examinations
ENTRY QUALIFICATION: 5 Credits in G. C. E. (O/L) and One Pass in G. C. E. (A/L)

(6) Craft Courses
தமிழ்மொழி மூலம் ஒரு வருட - முழுநேர வகுப்புகள்
வட்டுக்கோட்டை
(a) மெக்கானிக்கல் கிறா (:) ப்ற்ஸ்மன்
(லேத், வெல்டிங் என்பவை உட்பட)
(b) வயரிங் பயிற்சி
(c) ஓட்டொமோ பைல் தொழில்நுட்பம்
(மோட்டார் சைக்கிள், தண்ணீர்ப் பம்புகள், மோட்டார் கார் ஆகியன பராமரித்தலும் திருத்துதலும்)
(d) றேடியோ & ரி வி பழுது பார்த்தல்

G. C. E. (சா/த) இல் ஐந்து பாடங்களில் சித்தி:

விண்ணப்பப் படிவங்களை வட்டுக்கோட்டையிலும், யாழ்ப்பாணக் கிளையிலும் பெற்றுக் கொள்ளலாம்.

நேர்முகப் பரீட்சை 09ஆம் திகதி புரட்டாதி '98 காலை 10-30 (புதிய நேரம்)மணிக்கு வட்டுக்கோட்டையிலும் யாழ்ப்பாணக் கிளையிலும் நடைபெறும். விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்து தபால் மூலம் அனுப்பலாம்: அல்லது நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிக்கும்போது கொண்டு வரலாம்.

## JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY

( Jaffna Centre, Opposite O. P. D., Teaching Hospital, Jaffna. )

**464, Hospital Road, Jaffna.**

(C/4423)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவைப்பிரியர்களே!

## ஒரு நற்செய்தி!

செல்வச்சந்நிதி அருள்மிகு ஸ்ரீ முருகன்
அடியார்களுக்கென்றே
சுத்தமான நெய்யில் தயாரிக்கப்பட்ட

★ திருப்பதி லட்டு ★ மைசூர்ப்பாகு
★ மஸ்கற் ★ தொதல்

தாவர எண்ணெயில் தயாரிக்கப்பட்ட

★ மிக்சர் ★ கடலை
★ பருப்பு ★ கச்சான்

○ றொட்டி ○ கிழங்கு றொட்டி
○ மசாலை ○ மரக்கறிக் கொத்து

மற்றும் பலகாரங்கள்
சைவ கேக் வகைகள் நூற்றுக்கு நூறு
தரமான உணவு வகைகளைப் பெற்றிடவும்,

விசேடமாக
செட்டிநாட் ரெஸ்ரோரெண்டில் இருந்தும்,
பொம்பே சுவீற்சில் இருந்தும் 'மொனறா எயார்'
மூலம் தருவிக்கப்பட்ட தீன்சுவைப் பண்டங்களை
ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள
நாட வேண்டிய இடம்;

## ஸ்ரீ திருமால் விலாஸ்

மணியம் மடத்தடி,
சந்நிதி, தொண்டைமானாறு.
(இச்சந்தர்ப்பம் உற்சவ காலத்தில் மட்டுமே)
(சி/4694)

## வெளிவாரிப் பட்டப்படிப்புகள்
## கல்வியாண்டு 1999/2000

பேராதனை, யாழ். பல்கலைக்கழகங்களின்
பட்டப் பாட நெறிகளான

♥ கலைமுதற் தேர்வு (G. A. Q)
♥ வணிகமுதற்தேர்வு [First In Commerce]
♥ கணிதமும் புள்ளிவிவரவியலும் [G. S, Q]

க. பொ. த உயர்தரம் 3பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், அண்மையில் க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றியோரும் விண்ணப்பிக்கலாம்.

விவரத்தினையும் விண்ணப்பப் படிவத்தினையும் ரூபா 10 செலுத்தி நேரில்/தபால் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி 30 9-98
விரிவுரைகள் 03-10-98 ஆரம்பமாகின்றன.

கடந்த 20 வருடங்களாக பட்டப்படிப்புகளுக்கென தனித்துவமாக இயங்கும் ஒரே ஒரு நிறுவனம்.

உதவிப்பதிவாளர்
பட்டப்படிப்புகள்கல்லூரி

101/10 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/4699)

## நாகம்ஸ்
சினிமா
சுன்னாகம்
கார்த்திக் - கௌசல்யா
கவுண்டமணி- செந்தில்
நடித்த
பொன்னுமணி
இனிய பாடல்கள்
நிறைந்த படம்
திரைப்படக் கூட்டுத்தாபன (ரீல்ஸ்) படம்.
காட்சிகள்:- 10-30, 2-30
(58777)

## ஊர்மிளா
போட்டோ
கல்வியங்காடு.
ஆரம்ப ஆசிரியர் பயிற்சி நிகழ்வுக்குரிய புகைப்படங்கள் வந்துள்ளன; உரியவர்கள் பெற்றுக் கொள்ளவும்.
- நிர்வாகி
(58782)

எமது இன்றைய
வெளியீடுகள்!

★ லியோனியின்
பட்டி மன்றம்
'பட்டுக்கோட்டையா?'
'கண்ணதாஸனா?'
★ பிரச்சினை உருவாகப்
பெரும் காரணம்
ஆண்களா? பெண்களா?
மற்றும்
தொடர்
நாடகங்களான
★ விஸ்வாமித்திரர்
★ K. பாலச்சந்தரின்
காதல் பகடை
★ ரகு வம்சம்
★ K. பாலச்சந்தரின்
மர்மதேசம்
★ சூர்யா
★ CD யில் வெளியான
காட்டூன்கள்
★ விண்வெளிச்
சித்திரங்கள்
★ அதி பயங்கர
மிருகங்களின் சாகசங்கள்
நிறைந்த படங்கள்
★ தாக்குதல் சித்திரங்கள்
நிறைந்த படங்களும்
எம்மிடம வீடியோ CD யில்
வெளிவந்துள்ளன.

## நரேன்
வீடியோ சென்ரர்
140, பருத்தித்துறைவீதி,
யாழ்ப்பாணம்.
(சி/4695)

# சமய சந்நிதிகளில்

நீர்வேலி, ஓக. 30

சிறுப்பிட்டி ஸ்ரீ இராசராசேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் 27 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இரதோற்சவம் 5ஆம் திகதி சனிக்கிழமையும், தீர்த்தோற்சவம் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவுள்ளன. (இ-110)

★ ★ ★

சரித்திரப் பிரசித்தி பெற்ற பொன்னாலை அருள்மிகு ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோயில் வருடாந்த உற்சவ சப்பறத் திருவிழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும். (இ-30)

★ ★ ★

கொக்குவில் - பொற்பதி அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண வீரகத்தி விநாயக ஆலயத்தின் வருடாந்த உற்சவ மஞ்சத் திருவிழா நாளை திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெறும். (இ-30)

★ ★ ★

வடலியடைப்பு அருள்மிகு ஸ்ரீ புதராணை சித்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் கடந்த 26 ஆம் திகதி புதன்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து 13 தினங்கள் உற்சவம் நடைபெறும்.

எதிர்வரும் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணிக்கு சப்பறமும், 5 ஆம் திகதி காலை 9.00 மணிக்குத் தேர்த்திருவிழாவும், 6 ஆம் திகதி காலை 8 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும், மறுநாள் மாலை பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறும். (இ-30)

# இன்றைய கிரிக்கெட்

யாழ்ப்பாணம், ஓக. 30

யாழ். சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகத்தினால் யாழ். மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடத்தப்பட்டுவரும் டொனாலட் கணேசகுமார் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணக் கிரிக்கெட்சுற்றுப்போட்டியின் அரை இறுதி ஆட்டத்தில் இன்று யாழ். சென்றலைட்ஸ் (சொக்ஸ்) அணியை எதிர்த்து யாழ். பல்கலைக்கழக அணி மோதும். இன்றைய ஆட்டம் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும். (இ-9)

## ஸ்ரீ செல்வா
சினிமா
ஸ்ரான்லி வீதி.
யாழ்ப்பாணம்
தினசரி: 10-30, 2-30
(பழைய நேரம்)
ஷாருக்கான்
மனிஷாகொய்ராலா
நடித்த
உயிரே
புதிய வெளியீடு
(நேரடி CD யில்)
(58780)

# மரண அறிவித்தல்

திருமதி
## கந்தையாபிள்ளை சுந்தரம்

காரைநகர் களபூமியைப் பிறப்பிடமாகவும் தற்போது, 50/10, வைமன் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையாபிள்ளை சுந்தரம் 29-08-98 இல் சிவபதமடைந்தார்.

அன்னார் திருமதி கந்தையா வள்ளியம்மையின் ஏகபுத்திரியும், பிரபல வர்த்தகர் கந்தையாபிள்ளையின் (K.K.K.) அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கோம்பயன் மணல் மயானத்தில் இன்று (30-08-98) 2-00 மணியளவில் நடைபெறும்;

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க சிவபாலன்
(K. K. K.) மகன்)
யாழ்ப்பாணம்.
(58724)

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்களுக்கு
## - ஓர் இனிய நற்செய்தி -
# ரெலி குளோபல் கொமினிக்கேஷன்
தபால் கந்தோர் முன்பாக, கொடிகாமம் வீதி, கரவெட்டி.
## TELE GLOBAL COMMUNICATION
KARAVEDDY.
உள்நாட்டு, வெளிநாட்டு தொலைத் தொடர்புகளை
உடனுக்குடன் ஏற்படுத்திக் கொடுப்பதுடன், இரவு, பகலாக தனது சேவையை செய்துவருகிறது.

| | | |
|---|---|---|
| ஞாயிற்றுக்கிழமை நிமிடத்துக்கு | ரூபா: | 100.00 |
| ஏனைய நாள்கள் நிமிடத்துக்கு | ரூபா: | 125.00 |
| வெளியில் இருந்து வரும் அழைப்பு | ரூபா: | 5.00 |

தொலைபேசி இலக்கம்: வெளிநாட்டில் இருந்து எடுப்பதற்கு: 0094 - 70 - 212237
உள்நாட்டில் இருந்து எடுப்பதற்கு: 070 - 212237

# சென்றல் சேவிஸ் ஸ்ரேசன்
## CENTRAL SERVICE STATION
யாழ். வீதி, நெல்லியடி.
சகல வாகனங்க... சேவிஸ் செய்து கொடுக்கப்படும்.
நிர்வாகி
(58776)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பத்தவரின் மரணம் தொடர்பாக 8 சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர்

யாழ்ப்பாணம், ஓக. 30

தெல்லிப்பழை வைத்திய சாலையில் ஜூலை 15 ஆம் திகதி இறந்த தனது கணவனின் மரணத்தில் சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகவும். அவரது புதைகுழியைத்தோண்டுமாறும் இறந்தவரின் மனைவியினால் மல்லாகம்மாவட்ட நீதி மன்றத்தில் செய்யப்பட்ட மனுவைத் தொடர்ந்து இது வரை 8 சாட்சிகள் நீதிவான் மு. திருநாவுக்கரசுவினால் விசாரணை செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை மீண்டும் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது இறந்தவரின் மகள் பாலசுப்பிரமணியம் பாமினி, மனோதத்துவ நிபுணர் டாக்டர் ரி. சோமசுந்தரம், எஸ். குலவீரசிங்கம், செல்வி கு. ஆனந்தி ஆகியோர் சாட்சியமளித்தனர்.

இறந்தவரின் மனைவியின் நலனைக் கவனிக்கும் பொருட்டு அவரது சார்பில் சட்டத்தரணி க. அரியநாயகம் சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்தார்.

இந்த வழக்கில் சாட்சியமளித்த டாக்டர் த. சோமசுந்தரம் கூறியதாவது:-

15. 07. 98 அன்று மாலை 4 மணியளவில் தெல்லிப்பழை வைத்தியசாலையில் ஒரு நோயாளி கடும் நோய்க்குள்ளாகிஇருப்பதாக எனக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து நான் அங்கு விரைந்து சென்றேன்.

அன்று மாலை 4. 30 மணியளவில் ஆஸ்பத்திரிக்குள் சென்றபோது குறிப்பிட்ட நோயாளி இறந்து விட்டதாக கூறப்பட்டது. நான் இறந்தவரின் சடலத்தைப் பார்வையிடவில்லை. இது குறித்து அங்கிருந்த ஊழியர்களிடம் விசாரித்தேன்.

மூச்சுத்திணறல் ஏற்பட்டு இருதயப் பாதிப்பால் இவர் இறந்து விட்டதாக அவர்கள் கூறினார்கள்.

இப்படி அவர் சொன்னார்.

இடையே குறுக்கிட்ட இறந்தவரின் மனைவியின் நலனைக் கவனிக்கும் சட்டத்தரணி சாட்சியிடம்-

இறந்தவரின் வைத்திய அறிக்கையை படித்தபோது அவரிடம் முரட்டுத்தன்மை காணப்பட்டதால் அதனைத் தணிப்பதற்காக ஓர் ஊசி போடப்பட்டதாகவும் அதனைத் தொடர்ந்து 'மொடிக்கேற்' என்ற மனநோய்க்குரிய ஊசி போடப்பட்டதாகவும் அவதானிக்க முடிகிறது. இரு ஊசிகளையும் போட்டதனால் இந்த மரணம் நிகழ்ந்திருக்க சாத்தியம் உண்டா?- என்றுகேட்டார்.

சாத்தியம் இருக்கிறது என அப்போது சாட்சி பதிலதித்தார்.

சட்டத்தரணி: நீங்கள் சமர்பித்த அறிக்கையில் இந்த மரணத்துக்கு காரணம் மூச்சு திணறியதால் இருதய துடிப்பு செயலிழந்தது எனக் குறிப்பிட்டிருக்கிறீர்கள் ஊசி மருந்தாலும் மரணம் நிகழ்ந்திருக்கலாம் என ஏன் குறிப்பிடவில்லை?

சாட்சி: ஊசி மருந்து நூற்றுக்கு ஒரு வீதமானவர்களுக்கு மட்டும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

சட்டத்தரணி: நீங்கள் டாக்டர் சங்கரிடம் இறந்தவரின் மனைவியிடம் மன்னிப்பு கோருவதாக கதைத்திருந்தீர்களா?

சாட்சி: எனது நோயாளி ஒருவர் இறந்திருக்கும்போது அவரதுமனைவியிடம்பெருந்தன்மையின் அடிப்படையில் மன்னிப்புகேட்க முயன்றேன்

சட்டத்தரணி: இறந்தவரின் சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தியிருப்பின் மரணம் இருதய பாதிப்பினாலா? அல்லது ஊசி மருந்தினாலா? ஏற்பட்டது என்பதனைக் கண்டு பிடித்திருக்கலாம் அல்லவா?

சாட்சி: யாழ்ப்பாணத்தில் போதிய மருத்துவ உபகரணங்கள் இல்லாமையினால் பிரேதபரிசோதனை செய்து அதனைக் கண்டு பிடிப்பது கஷ்டமானதாகும்.

இந்த வழக்கு விசாரணை தொடர்ந்து நடைபெறவுள்ளது. மேல் விசாரணை செப்ரெம்பர் 4 ஆம் திகதி வரை ஒத்தி, வைக்கப்பட்டது. (இ-5)

## செப்ரெம்பரில்...

(முதலாம் பக்கத் தொடர்)

திய போது வன்னி தவிர்ந்த ஏனைய பகுதிகளுக்கு நிவாரணம் குறைக்கப்படமாட்டாது என ஜனாதிபதி உறுதி அளித்திருந்ததும் — தெரிந்தவையே.

ஜனாதிபதி வழங்கிய உறுதிமொழியின் படி வன்னிப் பிரதேசம் தவிர்ந்தஏனைய பகுதிகளுக்குநிவாரணக்குறைப்பை நீக்கி செப்ரெம்பர் முதலாம் திகதி தொடக்கம் அனைவருக்கும் முன்னரைப் போன்று நிவாரணம் வழங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்குமாறுஜனாதிபதி ஒ'படகேக்கு பணித்துள்ளார்.

இதனையடுத்து ஒபடகே செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி முதல் இடம்பெயர்ந்த மக்கள் அனைவருக்கும் நிவாரணத்தை வழங்குமாறு அரச அதிபர்களுக்கு கடிதங்களை அனுப்பி உள்ளார்எனத்தெரிவிக்கப்படுகின்றது. (இ-9)


எமது வீடியோ CD வெளியீடுகள்!

★ நான் ஆணையிட்டால்
★ சிவகங்கை சீமை
★ தூங்காதே தம்பி தூங்காதே
★ வீரபாண்டிய கட்டபொம்மன்

எமது அடுத்த புதிய வெளியீடு!

சிவாஜி, முரளி நடித்த என் ஆசை ராசாவே

சுப்பலோ வீடியோ
யாழ்ப்பாணம்.
(சி/4702)


## 15 ஆயிரம்

(முதலாம் பக்கத் தொடர்)

கக் கூறப்படுகிறது.

இதனால் பதிவுத் தபால்களின் விநியோகத்தில் வீண் காலதாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்தில் தரம் ஒன்று உத்தியோகத்தர்களுக்கு 45 வெற்றிடங்கள் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

ஊழியர்களின் பற்றாக்குறை தபால்கள் தேங்கிக் கிடப்பதற்குக் காரணமாக இருந்த போதும், தற்போது தேங்கியுள்ள பதிவுத் தபால்களை உரியவர்களிடம் சேர்ப்பிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தபாலக வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன. (இ-7)


A/L எடுத்தவர்களுக்கான
மேலும் ஒரு பிரிவு ஆரம்பம்
05 - 09 - 98
பி. ப. 3 மணி

OXFORD ENGLISH ACADEMY

ஆலடிப்பிள்ளையார் வீதி, சுப்பர் மடம், பருத்தித்துறை.
(அனுமதியை முன்கூட்டியே பெறவும்)

★ நெல்லியடியில் எமது வகுப்புகள்
31 - 08 - 98
பி. ப. 3மணிக்கு ஆரம்பம்.

அனுமதியை மத்திய கல்லூரிக்கு முன்பாக உள்ள லக்ஸ்மி மில்லில் பெறவும்.
(58757)

எமது ஒறிஜினல் வீடியோ CD வெளியீடு!

★ நிலாவே வா
[ Pyramid ]

லண்டன் ஐங்கரன் ஒறிஜினல் வீடியோ கசற்றுக்கள் ஜீன்ஸ், நட்புக்காக, பிரியமுடன் மற்றும் புதிய பழைய திரைப்படங்கள், திரைப்படப் பாடல்கள் அனைத்தும் லண்டன் ஒறிஜினல் கசற்றுக்களாக விற்பனைக்குண்டு.

● சொற்ப பிரதிகளே கையிருப்பிலுள்ளது.

வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.
(சி/4700)

BITSMANS
கல்வி நிறுவனம் மானிப்பாய்
புதிய பிரிவு

SPOKEN ENGLISH WITH GRAMMAR

BY
M. A. HARI

ஆரம்பம்: 01 - 09 - 98 செவ். 9 00 a. m.

குறிப்பு: மாணவர்கள் தொகை வரையறுக்கப்பட்டிருப்பதால் அனுமதிக்கு முந்துங்கள்.
(58678)


## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்)

றது.

புதிய நடைமுறையின் படி கூட்டுறவுச் சங்கங்களின் பங்கீட்டு அட்டையினைக் காட்டியே மண்எண்ணெயைப் பெற்றுக்கொள்ள முடியும்.

அதே சமயம் பாதுகாப்பு அமைச்சின் இந்த எரிபொருள் கட்டுப்பாடுகளை நீக்கக் கோரி புளொட் அமைப்பினர் மீண்டும் ஹர்த்தால் நடத்துவதற்குத் திட்டமிட்டு வருகின்றனர். (இ-164-9)

# மாவை கந்தன் ஆலய புனர்நிர்மாண வேலை

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் புனர்நிர்மாணத்துக்கான அடிக்கல் கடந்த 27ஆம் திகதி வைபவரீதியாக நடப்பட்டது.

இந்த நிகழ்வில் பொது மக்கள் பலர் கலந்து கொண்டதுடன் யாழ். பிராந்திய பிரதிப் பொலீஸ்மா அதிபர் இந்திரா டி. சில்வா, யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் சந்திரா பெரேரா, கேணல் கருணாரட்ன, யாழ். பொலீஸ் நிலைய தலைமைப் பொறுப்பதிகாரி கே. மோகன்தாஸ் உட்பட பல பொலீஸ் அதிகாரிகளும், இராணுவ அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

அடிக்கல் நடும் விழாவையொட்டி மேற்படி ஆலயத்தில் அன்னதானமும் வழங்கப்பட்டது. (இ-5)

# சுருக்கிட்டு இறந்த பெண் தற்கொலை எனத் தீர்ப்பு!

இணுவில் பகுதியில் கழுத்தில் சுருக்கிட்டுஇறந்த இளம் பெண்ணின் மரணம் ஒரு தற்கொலை மரணம் என்று மல்லாகம் மாவட்ட நீதிமன்ற மேலதிக நீதிவான் மு. சபாநாதன் மரண விசாரணையின்பின் தீர்ப்பு வழங்கினார்.

இணுவில் மேற்கில் கடந்த 17 ஆம் திகதி பாண்டியன் மோகனசிறி என்னும் இளம் பெண் கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலைசெய்துகொண்டதாக நீதிமன்றுக்கு தெரிவிக்கப்பட்டது.

இம் மரணம் தொடர்பாக மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிவான் மு. திருநாவுக்கரசுவின் பணிப்பின் பேரில் மேலதிக நீதிவான் மு. சபாநாதன் ஸ்தலத்திற்கு சென்று கழுத்தில் சுருக்கிட்ட நிலையிலிருந்த பெண்ணின் சடலத்தைப்பார்வையிட்டதுடன் விசாரணைகளை மேற்கொண்டு சடலத்தை பிரேதபரிசோதனை செய்யுமாறு உத்தரவிட்டார்.

மேலதிக நீதிவானின் உத்தரவையடுத்து சடலம் யாழ். போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரியினால் பிரேத பரிசோதனை செய்யப்பட்டது.

தூக்குப் போட்டதால் மூச்சுத் திணறி மரணமடைந்துள்ளதாக சட்ட வைத்திய அதிகாரி பிரேதபரிசோதனை அறிக்கையில் தெரிவித்தார்.

இந்த மரணம் தொடர்பாக இறந்தவரின் கணவர் வேலுப்பிள்ளை பாண்டியன் மற்றும் அவரது மாமியார் திருமதி வேலுப்பிள்ளை மகேஸ்வரி ஆகியோரின் சாட்சியங்களும் பதிவு செய்யப்பட்டன. (இ-5)

## ஒத்திவைப்பு

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தினால் (ரெலோ) இன்றும், நாளையும் யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் ஒழுங்குசெய்யப்பட்டிருந்த இரத்ததானம் வழங்கும் நிகழ்வு தவிர்க்கமுடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இரத்ததானம் வழங்கும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என ரெலோ அமைப்பினர் அறிவித்துள்ளனர்(இ-7)

## மூன்று...

(முதலாம் பக்கத்தொடர்)

12 பேர் அடங்கியவிடுதலைப் புலிகள் உறுப்பினர்களை அவதானித்ததாகவும் —

அவர்கள் மீது நடத்திய தாக்குதலில் மூவர் கொல்லப்பட்டதாகவும் —

ஏனையோர் காயங்களுடன் தப்பிச் சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

புலிகளின் மூன்று சடலங்களையும் ரி-56 துப்பாக்கிகள்-2, கிரனேட்டுகள்-2, மகஸீன்-3, கிளைமோர்-1 ஆகியவற்றை படையினர் கைப்பற்றியதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-139-15-5)

## ராணுவக்...

(முதலாம் பக்கத் தொடர்)

பெயர்ந்தவர்கள் அரசின் அதிகாரிகள் காரணமின்றி விதித்துள்ள கெடுபிடி நிபந்தனைகளால் இந்த மக்கள் பெரும் அல்லலுறுகின்றனர்.

இந்த மக்களில் 1 லட்சத்து 90 ஆயிரம் பேருக்கே ஜூலை முதலாம் திகதி முதல் உலர் உணவு நிவாரணம் வழங்குவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதாவது அங்குள்ள இடம்பெயர்ந்த மக்களில் 45 வீதமானோருக்கே நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

போருக்குக் காரணம் அல்லாத இந்த அப்பாவி மக்களுக்கு மருந்து விவசாயப் பொருள்கள், மண் எண்ணெய் ஆகியவையும் மறுக்கப்பட்டுள்ளன. 1997 இலும் இம் மக்கள் நிவாரண வெட்டால் பாதிக்கப்பட்டார்கள்.

இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்திலிருக்கும் மக்களும் இலங்கைப் பிரஜைகளாதலால் அவர்களுக்கு அடிப்படைத் தேவையான பொருள்களை வழங்கும்படி அரசைக் கோருகின்றேன் — என்று உள்ளது. (உ)

## 57 தொண்டர்...

(முதலாம் பக்கத்தொடர்)

ளார்.

கடந்த மே மாதம் தீவுப் பகுதித் தொண்டராசிரியர்களுக்கு வலயம் ஒன்றின் பணிமனையில் நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பாக நேர்முகப் பரீட்சை நடைபெற்ற சமயம் யாழ். மாவட்டத் தொண்டராசிரியர்கள் தமக்குநியமனம் வழங்கப்படவேண்டுமெனக் கோரிப் போராட்டம்ஒன்றை நடத்தியிருந்தனர் என்பது தெரிந்ததே. (இ-9)

## பெண் ஊழியர்...

(முதலாம் பக்கத் தொடர்)

கான காரணத்தை சரிவர இன்னும் அறிந்துகொள்ள முடியவில்லை என நாகொட ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் நேற்றுத் தெரிவித்தார்.

நாகொட ஆஸ்பத்திரியிலும், அளுத்கம ஆஸ்பத்திரியிலும் இவ்வாறு திடீர் சுகவீனமுற்ற 200பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவர்கள் உட்கொண்டதாகச் சந்தேகிக்கப்படும் மதிய உணவு, மற்றும் குடிதண்ணீர் பற்றிய விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக நாகொட ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-7)

## பாஸ்...

(முதலாம் பக்கத் தொடர்)

நிலை காணப்பட்டது. இதனால் அப்பகுதிகளில் பயணிகள் உணவு, தண்ணீர் வசதிகளின்றி சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர்.

நேற்று அப்பகுதிக்கு விஜயம்செய்த அதிகாரிகள் நிலைமையை நேரில் அவதானித்து மேலதிக படையினரை பாஸ் வழங்கும் கடமையில் ஈடுபடுத்தியுள்ளனர் எனவும்—

இதனால் பாஸ் வழங்குவதில் இனி காலதாமதம் ஏற்படமாட்டாது எனவும்—

பயணிகள் விரைவாக வவுனியா வர முடியும் எனவும்—

அந்த அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர். (9-164)

இப்பத்திரிகை திரு உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30-08-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org